439

குண்டூசி

ஏப்ரல்.... எட்டு அணா

1949
439/
OFFICE OF THE

பக்ஷிராஜாவின்

பவளக்கொடி

மாகாணம் முழுவதும்

50 தியேட்டர்களில்

இப்பொழுது நடைபெறுகிறது..

THE REGIST
MADRAS


விரைவில் எதிர்பாருங்கள்!
மஹாலிங்கம்
சரோஜா · சரஸ்வதி
கிருஷ்ணன் · மதுராம்
சாமிநாதன் மற்றும் பலர்
நடிக்கும்
சியாமளாவின்
ராஜகுமாரி - மந்திரிகுமாரன்
காதல் சித்திரம்... ரஸமான
சம்பவங்கள் நிறைந்தது...
ஸூபர் ரிலீஸ்..
SPC
DISTRIBUTORS OF SUPER HITS
ஸூபர் பிக்சர்ஸ் சர்க்யூட், மதராஸ்-7.

டைரெக்ஷன்:
எஸ். நொடானி



இந்த ஊசியில்

பட்டை-2. ஊசி - 7.

ஏப்ரல் 1949

1	வரவேற்கிறோம்	...	தலையங்கம்	5
2	உள்ளது உள்ளபடி	...	ஜடாயு	6
3	பவளக்கொடி	...	பட விமர்சனம்	8
4	டி. பாலசுப்ரமணியம்		வாழ்க்கை வர்ணனை	10
5	டி. பாலசுப்ரமணியம்	...	ஆர்ட் படம்	17
6	டி. கே. பட்டம்மாள்		இருவர்ணப் படம்	18
7	மூன் வினை		கே. மஹாதேவன்	19
8	குண்டூசியைக் கேளுங்கள்		பதில்கள்	22
9	செய்திப் படங்கள்	...	படங்கள்	31
10	பொதுஜனம் பேசுகிறார்		கடிதங்கள்	47
11	பானுமதி	...	மூவர்ணப் படம்	51
12	இன்பவல்லி	...	ஆர்ட் படம்	52
13	துனிப்புல்	...	வெடிடுக்கினி	58
14	இது செய்தி	...	செய்திகள்	61
15	பிரம்மலோகம்		ஸ்டுடியோச் செய்திகள்	65
16	குண்டூசி டைரி	...	தினக் குறிப்பு	68

அட்டைப் படம் :

பி. எஸ். சரோஜா

போட்டி, வெற்றி சுலபம்

12,000 **6000**

25,000*

4000 **3000**

போட்டி C: மேலேயுள்ள ஐந்து கட்டங்களில் 2 முதல் 6 வரையி லுள்ள நம்பர்களை அமைக்கவும். கூட்டினால் மொத்தம் 20 வரவேண்டும். எந்த நம்பரை வேண்டுமானாலும் முதலில் போடலாம். ஒரு நம்பரை ஒரே தடவைதான் உபயோகிக்கலாம்.

பிரவேசக் கட்டணம்: ஒரு விடைக்கு ரூ. 1. ஏழு விடைகளுக்கு ரூ. 5 தான்.

தொகையை மணியார்டர் மூலம் அனுப்பவும்.

எங்கள் விடைக்குச் சரியாயிருக்கும் ஒவ்வொரு விடைக்கும் பரிசு உண்டு. ஆதலால் நீங்கள் எவ்வளவு விடைகளை வேண்டுமானாலும் அனுப்பலாம். சாதாரணக் காகிதத்தில் விடைகளை எழுதி அனுப்பினால் போதும். பரிசு ஜாபிதாவை அனுப்புவதற்காக உங்கள் விலாஸமுள்ள தபால் கவர் ஒன்றை வைத்து அனுப்பவும்.

உங்கள் விடைகளை 11-5-49ந் தேதிக்குள் தபாலில் போடவும்

போட்டியில் கலந்து கொள்பவர்களுக்கு சரியான விடை நகல் 14-5-49ந் தேதி அனுப்பப்படும். பரிசு ஜாபிதா 21-5-49ந் தேதி அனுப்பப்படும்.

முதல் பரிசு: மதராஸ் ரிலயன்ஸ் பாங்கில் ஸீல் செய்து டிபாஸிட்டில் வைத்திருக்கும் விடைக்கு எண்ணுக்கு எண், கட்டத்திற்கு கட்டம் சரியாய் உள்ள விடைக்கு முதற் பரிசு அளிக்கப்படும். இரண்டாவது பரிசு: முதல் மூன்று எண்கள் சரியாயுள்ள விடைக்கு இரண்டாவது பரிசு. மூன்றாம் பரிசு: முதல் இரண்டு எண்கள் சரியாயுள்ள விடைக்கு மூன்றாம் பரிசு. நான்காம் பரிசு: அதிகப்படியான விடைகளை அனுப்புபவர்களுக்கு நான்காம் பரிசு.

வசூலாகும் மொத்தத் தொகையிலிருந்து விளம்பரச் செலவும், தவிர பன்னிரண்டரை சத விகிதம் நிர்வாகச் செலவும் போக மிகுதியை 1, 2, 3, 4 பரிசுதாரர்களுக்கு முறையே 12000, 6000, 4000, 3000 (மொத்தம் 25000*) விகிதாசாரப்படி பகிர்ந்து அளிக்கப்படும். ஆகவே வசூலுக்குத் தக்கபடி பரிசுத் தொகை குறையும் அல்லது கூடும். ஆகையால் உங்கள் நண்பர்களையும் போட்டியில் கலந்து கொள்ளும்படி சொல்லி, வசூலை அதிகரிக்கச் செய்யவும்.

எல்லா விஷயங்களுக்கும் எங்கள் தீர்ப்பே முடிவானதும் சட்டப்படி கட்டுப் படுத்து வதும் ஆகும். மற்ற விதிகள் வழக்கம் போல்.

லக் & கோ.,

(FIRM 1564 GOVT. REGD)

43/23, ஈஸ்வரன் தெரு, :: மாம்பலம் :: சென்னை-17.

பட்டை 2
ஊசி 7

குண்டூசி

ஆசிரியர் பி.ஆர்.எஸ். கோபால்

ஏப்ரல்
1949

வரவேற்கிறோம்

சென்ற பத்து வருஷ காலத்தில் நம் சினிமாப் படங்கள் எந்த விதத்தில் முன்னேறியுள்ளன என்று பார்த்தால் ஆபாசக் காட்சிகள் அதிகரித்திருப்பதுதான் முதன்மையாய்த் தோன்றும். "மக்கள் எக்கேடு கெட்டாலும், நம் சிறுவர் சிறுமியர் எப்படிப் பாழானாலும், நம் தேசம் எவ்விதம் குட்டிச்சுவர் ஆனாலும் பரவாயில்லை; நமக்கு மட்டும் கொள்ளை லாபம் வந்தால் சரி" என்ற கொள்கையையே நம் பட முதலாளிகள் வளர்த்து வருகிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்ததே. இவ் வுன்னதக் கலையை, கலையிலிருந்து தொழிலாக்கி, இப்பொழுது அதை ஒரு ஆபாசத் தொழிலாக்கி வருவதற்கு ஒரு முடிவு கட்ட வேண்டுமென்று பல மூலைகளிலிருந்தும் கூக்குரல்கள் கிளம்பி வந்தன.

இதன் விளைவாக, சென்ற மாதக் கடைசியில் இந்திய பார்லிமென்டில் ஒரு சினிமாச் சட்ட திருத்த மசோதா கொண்டுவரப்பட்டு, விவாதத்திற்குப் பிறகு, இம் மாதம் 9-ந் தேதியன்று நிறைவேற்றப்பட்டிருக்கிறது. சினிமாப் படங்களை யார் வேண்டுமானாலும் பார்க்கலாம் என்ற தற்போதைய நிலைமையை மாற்றி, பதினெட்டு வயதிற் குட்பட்ட சிறுவர், சிறுமியர் பார்க்கத் தகாத சில படங்களை அவர்கள் பார்க்க வொட்டாமல் தடுப்பதே இச் சட்டத்தின் நோக்கமாகும். "எல்லோரும் பார்க்கக்கூடிய படங்கள்" என்றும், "சிறுவர் சிறுமியருக்கு லாயக்கற்றவை" என்றும் இனி இரு ரகமாக நம் படங்கள் பிரிக்கப்பட்டு லைசென்ஸ் வழங்கப்படுமாம்.

இது போன்ற பாகுபாடுமுறை மேனாடுகளி லெல்லாம் அமுலில் உள்ளது. இச் சட்டத்தை நிறைவேற்றியதற்காக இந்திய சர்க்காருக்கு நம் மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். உண்மையில், இச் சட்டம் பல வருஷங்களுக்கு முன்பே கொண்டு வரப் பட்டிருக்க வேண்டியதாகும்.

இச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வருவதில் சில கஷ்டங்கள் இருக்கும். ஆனால் பொது ஜனங்களும், பெற்றோர்களும், தியேட்டர்காரர்களும் ஒத்துழைத்தால் இக் கஷ்டங்கள் நாளடைவில் நீங்கிப் போகும்.

உள்ளது உள்ளபடி

ஜடாயு

டூரிங் சினிமாக்களைப் பற்றி, முன்பே இப் பகுதியில் நான் எழுதியிருக்கிறேன். சமீபகாலமாக, டூரிங் சினிமாக்களுக்கு உள்ள கஷ்டங்கள் அதிகரிக்கவும், அதன் முதலாளிகளெல்லாம் சேர்ந்து அரக்கோணத்தில் ஒரு சங்கத்தை ஆரம்பித்து நடத்தி வருகிறார்கள். இச் சங்கம் தோன்றியது முதல் தங்களுக்குள்ள குறைகளைப் போக்கிக் கொள்ளுவதற்கு தீவிர முயற்சிகள் எடுத்து வருகின்றனர். சங்கத் தலைவர் கே. சுப்ரமண்யத்தின் தலைமையில் ஒரு தூதுக் கோஷ்டி கல்வி மந்திரியைப் பேட்டி கண்டு விட்டு வந்திருக்கிறது.

அவர்கள் குறைகள்

மந்திரியிடம் அவர்கள் சமர்ப்பித்துள்ள மகஜரில், டூரிங் சினிமாக்களுக்கு இருந்து வரும் கஷ்டங்களை நன்கு எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இக் குறைகள் என்ன வென்பதை முதலில் கவனிப்போம்.

டூரிங் சினிமாக்களுக்குள்ள முக்கிய குறை—அவைகளை முதலில் ஒரு ஊரில் நடத்துவதற்கு லைசென்ஸ்-கள், ஸர்டிபிகேட்டுகள், பர்மிட்கள் முதலியவைகளை வாங்குவதே யாகும். வெளியூர் சர்க்கார் அதிகாரிகளைப் பற்றி எனக்கும் கொஞ்சம் அநுபவ முண்டு. அவர்களில் அநேகர் தமக்குத் தாமே ஒரு சிற்றரசர்கள் போல மதித்துக் கொள்ளுவார்கள். அதுவும் டூரிங் சினிமாக்களுக்கு லைசென்ஸ் வாங்குவதுபோன்ற ஒரு காரியத்திற்கு அணுகும்போது, அவர்கள் மஹாராஜாக்களாகவே மாறி விடுவார்கள். லைசென்ஸ் வாங்குவதற்கு சிபார்சுகள், தாக்ஷிண்யம் போன்ற பல விஷயங்கள் குறுக்கிடும். மொத்தத்தில், எல்லா அதிகாரிகளையும் திருப்தி செய்து ஒரு டூரிங் சினிமாவுக்கு அநுமதி பெறுவதற்கு பகீரதப் பிரயத்தனம் செய்ய வேண்டி யிருப்பதாகத் தெரிகிறது. அதுவும் "காக்காய் பிடிக்க"த் தெரிந்தவர்களுக்கே வெற்றி கிடைக்கிறதாம். இட வசதி, சுகாதாரம், பந்தோபஸ்து இவற்றை யெல்லாம் அதிகாரிகள் பரிசிலனை செய்த பின் அனுமதி அளிக்க வேண்டியது அவசியந்தான். ஆனால் இக் காரணங்களால் லைசென்ஸ் கொடுப்பதற்கு மிகுந்த கால தாமதம் ஏற்படுவது தவிர்க்கப்பட வேண்டும்.

இன்னும் ஒரு விசித்திரமாம். டூரிங் சினிமாச் சட்டத்தை அதிகாரிகள் தங்கள் தங்கள் இஷ்டம் போல் வியாக்கியானம் செய்து கொள்ளுகிறார்களாம். இதனால் சரியான சட்டமும், நடவடிக்கையும் எது என்று திட்டமாகக் கொள்ள முடியாமலிருக்கிறதாம். இந்த முரண்பாடு உடனே ஒழிக்கப்பட வேண்டும். லைசென்ஸ்களை துரிதமாகவும், சுலபமாகவும் வழங்குவதற்கு சர்க்கார் வேறு ஏதேனும் ஏற்பாட்டைச் செய்யவேண்டியது அவசியமாகும்.

மேலும் தொல்லை

டூரிங் சினிமாக்களை ஆரம்பிப்பதற்குத்தான் இவ்வளவு தொல்லைகள் என்றால் அவைகளை நடத்துவதற்கும் அநேக தொல்லைகள் உள்ளன. தமாஷா வரியை செலுத்துவதற்கும், அவர்களிடம் டிக்கெட்டுகளுக்கு முத்திரை போட்டு வாங்கிக் கொள்ளுவதற்கும் அநேக கஷ்டங்கள் இருந்து வருகின்றனவாம். சில ஸ்தல அதிகாரிகள் பொறுப்பை உணர

வெளியூர்களில் ஓடிக் கொண்டிருக்கும் "விநோதினி" ஸ்டன்ட் படத்தில் காமெடியன் ராஜு-வும், ஸ்டன்ட் சோமுவும்.

மறும் நடந்து கொள்ளுகிறார்களாம். இதனால் சில சமயம் காட்சிகளை தாமதிக்கவோ, அல்லது திருத்திவிடவோ வேண்டியதாகிறதாம். இவ் விஷத்திலும் சர்க்கார் பரிகாரம் அளிக்கவேண்டும்.

லைஸென்ஸ் காலத்தை நீடிக்கலாம்

இப்பொழுதெல்லாம் டூரிங் சினிமாக்களுக்கு ஆறுமாத லைஸென்ஸே வழங்கப்படுகிறது. இதற்குப் பதில் ஒரு வருஷ லைஸென்ஸ் அளிக்க வேண்டுமென்று சங்கத்தினர் கேட்கின்றனர். டூரிங் சினிமாக்கள் கால நிலை, காற்று, மழை இவை காரணமாக வருஷத்தில் ஆறு மாத காலமே ஒழுங்காக நடைபெற முடியும். ஆதலால், லைஸென்ஸ் காலம் ஒரு வருஷமாக நீடிக்கப்பட்டால் டூரிங் சினிமாக்களுக்கு அது லாபகரமாய் இருக்கும்.

போட்டி கூடாது

டூரிங் சினிமாக்களின் நோக்கமும் அவசியமும் என்னவெனில், நிரந்தர தியேட்டர்களைக் கட்ட முடியாத, நடத்த முடியாத பிரதேசங்களுக்குச் சென்று, குறைந்த செலவில் பொழுதுபோக்கு அளிப்பதே ஆகும். ஆகவே, அவர்கள் ஏற்கனவே நிரந்தர தியேட்டர்கள், அல்லது டூரிங் சினிமாக்கள் நடந்து வரும் இடங்களுக்குச் சென்று, தங்கள் தொழிலையும், மற்றவர்களின் தொழிலையும் மோசமாக்குவது நியாயமாகாது. ஆனால், ஏராளமான ஜனத்தொகை உள்ள ஊர்களில் போதுமான தியேட்டர்கள் இல்லாமலிருந்தால் அங்கு டூரிங் டாக்கிஸ்களுக்கு லைஸென்ஸ் வழங்கலாம்.

ஆதரவு அளிக்கவேண்டும்

டூரிங் சினிமாக்கள் பொது ஜனங்களுக்கும், சினிமாத் தொழிலுக்கும், சர்க்காருக்கும் சிறந்த சேவை செய்து வருவதை சர்க்கார் உணரவேண்டும். குறைந்த செலவில் ஜனங்களுக்கு பொழுதுபோக்கையும், சினிமாத் தொழிலுக்கு நல்ல வருமானத்தையும், மது வருந்தி வந்தவர்கள் அதை மறந்து போவதற்கு சாதகமும் இவை மூலம் ஏற்படுகின்றன. இப்பொழுதுள்ள பல தொல்லைகளின் காரணமாக நூற்றுக்கு சுமார் 50 டூரிங் சினிமாக்களே நடந்து வருகின்றனவாம். மற்றவை வெறுமனே இருக்க வேண்டியதாகிறதாம். ஆதலால் சர்க்கார், டூரிங் சினிமாக்களுக்கு உள்ள கஷ்டங்களைப் போக்கி, இப்பொழுதுள்ள டூரிங் சினிமாக்கள் எல்லாம் வேலை செய்யும்படிச் செய்வதோடு, மேலும் அதிக சினிமாக்கள் தோன்றுவதற்கும் வசதி அளிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

VISIT

MEERANS

for Textiles of every description.

★

Distributors of

Buckingham & Carnatic Mill goods, Mettur Mill goods, Bombay & Ahmedabad goods.

★

Stockists of :

TWEEDS—
FURNISHING
FABRICS—
HOSIERY—
FOREIGN
IMPORTED
GOODS.

S. MEERA SAHIB & BROS.

38, EVENING BAZAAR ROAD,
MADRAS.

Head Office :
19, Godown Street, Madras 1.

"பவளக்கொடி"—ஒரு சங்கீதப் படம்

ஐந்து வேஷங்களில் மஹாலிங்கம்

சுமார் பதினைந்து வருஷங்களுக்கு முன் எம். கே. டி. பாகவதரின் முதல் படமான "பவளக்கொடி" வெளி வந்தது. சென்ற வருஷம் மீண்டும் இந்தப் "பவளக்கொடி"யைத் தயாரிக்கும் விஷயத்தில் கடுமையான போட்டி ஏற்பட்டது. அப்போட்டியில் வெற்றி பெற்று, டைரெக்டர் ஸ்ரீராமுலு நாயுடு இப்படத்தைக் கொண்டு வந்துள்ளார். நாடக மேடையில் பிரபலமாக விளங்கிய இக்கதை பல வருஷங்களுக்குப் பின் மீண்டும் படமாக வருவது வரவேற்கத் தக்கதே.

படக் கதை அமைப்பு அவ்வளவாக சோபிக்க வில்லை. அல்லியின் பாகம் அதிகமாக வளர்ந்திருக்கிறது. அர்ஜுனன் பவளக் கொடியை அடைவதற்குப் படும் அல்லல்களையும், அவர்களிடையே ஏற்படும் காதலையும் கதாசிரியர் (இளங்கோவன்) முக்கிய அம்சமாகக் கொண்டிருக்க வெண்டும். படத்தில் அசல் கதைக்குப் பதில் உப கதைகளும், சம்பவங்களுமே முக்கியத்துவம் பெற்றுள்ளன.

ருக்மணிக்கு கிருஷ்ணன் பவளக் கொடியின் கதையைச் சொல்ல ஆரம்பிப்பதாய் காட்டப் படுகிறது. ஆனால் அக் கதையைச் சொல்லி முடிப்பதாகக் காட்டவில்லை.

இப்படத்தில் முக்கிய அம்சமாக விளங்குவது காதுக்கினிய சங்கீதமாகும். பாட்டுக்கள் அளவுக்கு அதிகமாக இருக்கின்றன என்று கூடச் சொல்ல வேண்டும்.

டி. ஆர். மஹாலிங்கத்தை இப்படத்தில் நிறையப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர் கிருஷ்ணன், வேடன், வெட்டியான், வைத்தியன் ஆகிய வேஷங்களில் மட்டுமன்றி ஸ்திரீ வேஷத்தில் கூடத் தோன்றுகிறார்! கிருஷ்ணன் வேஷம் அவருக்குத் தத்ரூபமாய்ப் பொருந்தி யிருக்கிறது. லகுவாகப் பேசி இயற்கையாக நடித்திருக்கிறார். அவர் ஏற்றுள்ள மற்ற வேஷங்களிலும் அவர் பொருத்தமாய் நடித்திருக்கிறார். ஆனால் ஸ்திரீ வேஷம் மட்டும் பொருத்தமாய் இல்லை. அவரது குரலும் இடையூறாய் நிற்கிறது. மஹாலிங்கத்தின் பாட்டுகள் இனிமையாய் இருக்கின்றன.

அல்லியாக நடிக்கும் சரோஜினிக்கும் நிறைய சந்தர்ப்பம் அளிக்கப் பட்டுள்ளது. அவர் இனிமையாகப் பாடியிருக்கிறார். 'சரவணபவ' என்ற பாட்டு குறிப்பிடத் தக்கது. நடிப்பும் பரவாயில்லை. ஆனால் வீரா வேசக் கட்டத்தில் அவரது நடிப்பும் பேச்சும் சோபிக்கவில்லை.

அர்ஜுனனாகத் தோன்றுபவர் டி. ஈ. வரதன். அவருக்கு முதலாவதாக வேஷப் பொருத்தம் இல்லை. அர்ஜுனனுக்கு இருக்க வேண்டிய காம்பீர்யமும் அவரிடத்தில் இல்லை. அவரது பேச்சுக்கும் பாட்டுக்கும் குரல் வித்தியாசப் படுகிறது.

ராஜகுமாரியின் உழைப்பு இப்படத்தில் அவ்வளவாக சோபிக்கவில்லை. அவருக்கு அல்லியின் வேஷத்தையும், சரோஜினிக்கு பவளக்கொடி வேஷத்தையும் கொடுத்திருக்கலாம் என்று தோன்றுகிறது. ராஜகுமாரியின் பாட்டுகள் இரண்டு நன்கு பதிவாக்கப்பட்டுள்ளன.

குமாரி என். ராஜத்திற்கு இப்படத்தில் ஆரம்பம் முதல் கடைசி வரையில் தோன்றி, நிறையப் பேச இடம் அளிக்கப் பட்டிருக்கிறது. அவரும் 'வெடுக் வெடுக்' கென்று பேசி யிருக்கிறார். நடிப்பும் பரவாயில்லை. ஆனால் அவரது வாய் மூலம் நாம் கேட்கும் பாட்டுகள் அவருடையதல்ல வென்று கேள்வி.

குமாரி ஹரிணி கொஞ்ச நேரம் தான் (ருக்மணியாக) திரையில் தோன்றுகிறார். அதற்குள் அவரது பாட்டும் பேச்சும் கவனத்தைக் கவர்கின்றன. ஆனால், அவர் கழுத்தை அதிகம் நெளிக்காமல் பேசப் பழக்கிக் கொள்ள வேண்டும். மேனகா, ரஜனி ஆகியோரது நடிப்பு புகழக் கூடியதாய் இல்லை.

கிருஷ்ணன், மதுரம் ஹாஸ்யம் இப் படத்தில் பாராட்டக் கூடியபடி அமைய வில்லை. கிருஷ்ணன் பாடும் ஹிந்தி-தமிழ் பாட்டு ஒன்றுதான் கொஞ்சம் சிரிப்பை வரவழைக்கிறது.

பாட்டுகளை பாபநாசம் சிவன், நாராயண கவி, கவி குஞ்சரம் ஆகியோர் அமைத்துள்ளனர் சங்கீத டைரெக்ஷன் பாராட்டத் தக்கதே. லலிதா-பத்மினி நாட்டியமும் படத்தில் இருக்கிறது.

படத்தில் பொழுது போக்கு அம்சங்கள் நிறைந்திருப்பதால் படத்திற்கு நல்ல வசூல் ஏற்படக் கூடும்.

— பி. ஆர். எஸ்.

உடனே எழுதுங்கள்!

சொற்ப பிரதிகளே உள்ளன

நக்ஷத்திர மாலை

2

"குண்டூசி" எழுதியது

★

எம். கே. டி. பாகவதர், கிருஷ்ணன்-மதுரம், ஹொன்னப்ப பாகவதர், பி. எஸ். கோவிந்தன், காமெடியன் சாரங்கபாணி, எம். கே. ராதா, எம். வி. ராஜம்மா, குமாரி ருக்மணி, வஸந்த கோகிலம், தனலக்ஷ்மி, சந்தானலக்ஷ்மி போன்ற

21 சினிமா நக்ஷத்திரங்களின்
வாழ்க்கை வர்ணனையும்
அழகிய ஆர்ட் படங்களும்
அடங்கியது

விலை ரூ. 2. தபாற் சிலவு அணு 6

"குண்டூசி" காரியாலயம்,

25, கிடங்குத் தெரு, சென்னை 1.


ஞான
சௌந்தரி
முகில்.

. பால
சுப்ரமணியம்

ஒரு நாள் நான் வழக்கமாக காப்பி சாப்பிடும் ஹோட்டலுக்குப் போனேன். வாயில் ஏதோ ஒரு பாட்டை முனகிக் கொண்டே ஒரு புது 'ஸர்வர்' வந்து நின்றான். அவனுடைய தலையலங்காரமும், மஸ்லின் ஜிப்பாவும், தங்கச் சங்கிலியும், அவன் ஒன்று நாடகத்திலிருந்து வந்தவன், அல்லது சினிமாவில் சேர முயற்சித்து வருபவன் என்பதை விளக்கின.

"என்ன ஸார், சாப்பிடுகிறீர்கள்?" என்று கேட்ட வண்ணமே அவன் பக்கத்து நாற்காலியில் நான் வைத்திருந்த தோல் பையின் மீது கவனத்தைச் செலுத்தினான். "ஏன், ஸார், நீங்கள் தான் குண்டுசிபா?" என்று கேட்டான். "இல்லை, நான் அந்த ஆபீஸில் ஒரு குமாஸ்தா" என்று பொய் சொன்னேன்,

"ஸார், எனக்கு நீங்கள் ஒரு உதவி செய்யவேண்டும். 'குண்டுசி'யிடம் சொல்லி என்னை சினிமாவில் சேர்த்துவிடச் செய்ய வேண்டும்" என்று வேண்டினான் அவன். நான் "ஆகட்டும்" என்று மரியாதைக்காகச் சொல்லி



தேன், அவன் விடாமல், "ஸார், நீங்கள் என்னைக் கட்டாயம் சினிமாவில் சேர்த்து விடவேண்டும" என்ருன்.

"சுகமாகச் சாப்பிட்டுக் கொண்டு வேலைபார்ப்பதை விட்டு விட்டு, நீ என் சினியாவில் சேர்ந்து அவஸ்தைப் படத் துடிக்கிருய்?" என்று கூறி நான் அவன் மனதை மாற்ற முயன்றேன். ஆனல் அது பலிக்கவில்லை.

சுமார் பதினெட்டு மாதங்களுக்குப் பிறகு என் காரியாலயத்துக்கு யாரோ ஒருவர் வந்தார். "ஸார், என்னைத் தெரிகிறதா உங்களுக்கு?" என்று கேட்டார் அவர்.

வைத்தேன். அவன் இட்லி கொண்டு வர உள்ளே சென்ருன். அவன் திரும்பி வந்ததும், "ஸார் நீங்கள் என்னை ஏமாற்றி விட்டீர்களே? நீங்கள் தான் 'குண்டுசி' என்று அந்த பழைய 'ஸர்வா' சொல்லுகிருனே?" என்று கேட்டான். நான் சிரித்தபடி சும்மா இருந

அவரை எங்கோ பார்த்த மாதிரி தோன்றியது. ஆனால் என்னால் அடையாளம் புரிந்து கொள்ள முடியவில்லை.

"நான்......படத்தில் ஹீரோவாக நடிக்கிறேன்.........ஹோட்டலில் நாம் பேசிக் கொண்டிருந்தோமே; ஞாபகமிருக்கிறதா?" என்று கேட்டார். எனக்குப் புரிந்து விட்டது. ஆம்; அதே 'ஸர்வர்'தான்; இப்பொழுது ஹீரோ!

இந்த சம்பவம் உங்களுக்கு ஆச்சரியத்தை அளிக்கலாம். ஆனால் எனக்கென்னவோ அப்படியல்ல. எந்தெந்தத் தொழிலில் இருந்தவர்களெல்லாமோ இந்த சினிமாவுக்கு வந்திருக்கும் விஷயம் எனக்குத் தெரியும். அவர்களில் சிலர் சினிமாவுக்கு வருவதற்கு முன்னர் செய்து கொண்டிருந்த தொழில்களை அறிந்தீர்களானால் ஒரேயடியாய் ஆச்சரியத்தில் மூழ்கிப் போய் விடுவீர்கள். உதாரணமாக, தற்போது தமிழ்ப்பட உலகில் பிரபல நடிகர்களில் ஒருவராய் விளங்கும் டி பாலசுப்ரமண்யம் "ஒரு காலத்தில் ஒரு பிள்ளையார் கோவில் பூசாரியாய் இருந்தார். இன்னொரு சமயம் ஒரு இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியில் ஆபீஸ் பையனாக இருந்தார்" என்று நீங்கள் கனவிலாவது நினைத்திருப்பீர்களா? நக்ஷத்திரங்கள் சம்பந்தமான எவ்வளவோ ஆச்சரியங்களைக் கேள்விப் பட்டுள்ள எனக்குக் கூட இச்செய்தி ஆச்சரியத்தை விளைவித்தது!

பாலசுப்ரமண்யம் சென்னையை அடுத்த ஐயனாவரத்தில் ஒரு சாதாரண லிங்காயத் குடும்பத்தில் விஸ்வாசு வருஷம் கார்த்திகை மாதம் 19-ம் தேதியன்று சதய

கன்னிகா

நக்ஷத்திரத்தில் துரைசாமி என்பவரின் புதல்வராய் பிறந்தார். பாலசுப்ரமண்யத்தின் தாய்ப் பாட்டனர் கொத்தவால் சாவடியில் ஒரு நாட்டு மருந்துக் கடையை நடத்தி வந்தார். ஜார்ஜ் டௌனில் முதன் முதலில் ஏற்பட்ட மருந்தக் கடையாம் இது. பாட்டனர் காலமான பின் பாலசுப்ரமண்யத்தின் தகப்பனரே இந்த மருந்துக் கடையை நடத்தி வந்தார்.



இந்த மருர்துக் கடை நடந்து வந்த வரையில் அக்குடும்பம் எவ்விதக் குறையுமின்றி வாழ்ந்து வந்தது. சில வருஷங்களுக்குப் பிறகு நஷ்டம் ஏற்பட்டதால் மருந்துக் கடை மூடப்பட்டது. அது முதல் இக்குடும்பம் க்ஷீணதசை அடைய ஆரம்பித்தது. 'பாலு'வின் தகப்பனர் கொஞ்சகாலம் சென்னை அரசாங்க அச்சுக்கூடத்தில் 'ட்ரெடில் மெனு'க வேலை பார்த்தார். பிறகு ராயபுரத்தில் உள்ள ஸ்ரீ. பொன்னுவேல் கிராமணியின் வீட்டிலும், அவரது மேற்பார்வையில் இருந்து வந்த ஒரு பிள்ளையார் கோயிலி





லும் பூஜை செய்யும் வேலையை பாலு வின் தகப்பனார் மேற்கொண்டார். பாலு ராயபுரத்திலிருந்த ஒரு பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்பட்டு முதலாவது பாரத்தில் படித்து வந்தார்.

பாலுவுக்கு பனிரெண்டாவது வயது நடந்து கொண்டிருக்கையில், அவரது தகப்பனார் தம் குடும்பத்தை நிர்கதியாய் விட்டு விட்டு விண்ணுலகேகினார். பாட்டியும் தாயாரும் பிழைப்புக்கு என்ன செய்வது என்று தோன்றாமல் தவித்தனர். தகப்பனார் செய்து வந்த பூசாரித் தொழிலையே பையனும் (படிப்பை நிறுத்தி விட்டு) மேற்கொள்ள வேண்டியதாயிற்று! பாலு தம் பாட்டியின் உதவியுடன் இத்தொழிலைச் செய்து வந்தார்!

பையன் பாலுவுக்கென்னவோ பூசாரித் தொழில் பிடிக்கவில்லை. அதோடு கூட குடும்பத்துக்கு அது அளித்த வருமானமும் போதவில்லை. ஆகவே அவர் இந்தத் தொழிலைச் செய்த படியே ஓரியன்டல் கவர்ன்மென்ட் செக்யூரிடிலைப் அஷ்யூரன்ஸ் கம்பெனியில் ஆபீஸ் பையனாகச் சேர்ந்தார். இந்த உத்தியோகம் அவருக்கு அளித்த எட்டு ரூபாய் அந்தக் குடும்பத்திற்கு பிரமாத வருமானமாய் இருந்ததென்றால் அந்தக் குடும்பத்தின் பொருளாதார நிலைமையை நீங்களே யூகித்துக் கொள்ளுங்களேன்!

இப்படியாக அக்குடும்பம் காலந் தள்ளி வந்த சமயத்தில் நிகழ்ந்த ஒரு சாதாரண சம்பவம் அக்குடும்ப நிலையிலும் பாலுவின் வாழ்க்கையிலும், ஒரு மஹத்தான மாறுதலை ஏற்படுத்தி விட்டது. ஒரு நாள் பாலுவின் பாட்டியும் அவரது தாயாரும் அவரைச் சென்னையிலேயே விட்டு விட்டு, சிதம்பரத்திற்கும், திருவண்ணாமலைக்கும் சுவாமி தரிசனம் செய்து வரப் புறப்பட்டனர். அவர்கள் இப்படிச் செய்தது பாலுவுக்குத் தாங்க முடியாத வருத்தத்தை ஏற்படுத்தி விட்டது. எப்படியாவது தாமும் திருவண்ணாமலைக்கும், சிதம்பரத்திற்கும் சென்று சுவாமி தரிசனம் செய்து விட்டு வர வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டார். இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியில் அன்றுதான் சம்பளம் கொடுத்திருந்தார்கள். அந்த 8

ரூபாயை எடுத்துக் கொண்டு, திருவண்ணாமலைக்கு வழிகூடத் தெரியாத அவர் சென்ட்ரல் ஸ்டேஷனில் ரயிலேறி, சுற்று வழியாக முதலில் திருவண்ணாமலையையும் பிறகு சிதம்பரத்தையும் அடைந்தார்.

பாலு புறப்பட்ட காரியமென்னவோ முடிந்தது; அண்ணாமலையாரையும் சிதம்பரநாதனையும் சேவித்தாகிவிட்டது. கையிலிருந்த பணத்தையெல்லாம் செலவழித்து விட்ட பாலுவுக்கு ஊருக்குத் திரும்பிப் போக இஷ்டமில்லை. சிதம்பரத்திலேயே தங்கி விடுவது என்று தீர்மானித்தார். ஆனால் அதற்கான வழி மட்டும் அவருக்குப்புலப்படவில்லை.

பாலசுப்ரமணியம், அவரது புத்திரன் பசுபதி, வாழ்க்கைத் துணைவி சரஸ்வதி.

'பாம்பின் கால் பாம்புக்குத் தெரியும்' என்பார்கள். அதுபோல அவரைச் சந்தித்த ஒரு பையன் அவரது உண்மை நிலையை யூகித்துக் கொண்டான். பாலுவிடம் அவன் சில வார்த்தைகள் பேசியதுமே தான் யூகித்தது சரியாக இருந்ததை அறிந்தான். அவனும் சில வருஷங்களுக்கு முன் வீட்டிலிருந்து சொல்லிக்கொள்ளாமல் வெளியேறி ஒரு புது ஊரில் ஆதரிப்பாரின்றி அவஸ்தைப் பட்டிருந்ததால் அவனுக்கு பாலுவின் மேல் மிகுந்த அனுதாபம் ஏற்பட்டது. அவரைத் தன் வீட்டிற்கழைத்துச் சென்று தன் தாயாரிடம் அறிமுகப் படுத்தினான். அந்த அம்மாவும் பாலுவிடம் மிகுந்த அன்பு காட்டி அவரை உபசரித்தாள்.

இப்படியாக மூன்று தினங்கள் கழிந்தன. நான்காவது நாள் காலையில் பாலு வெளியே சென்று விட்டு

(தொடர்ச்சி 53-ம் பக்கத்தில்)

'பம்பாய் மெயில்' நாடகத்தில் ஒரு காட்சி. நடுவில் இருப்பவர்தான் டி. பாலசுப்ரமணியம். இடதுபுறம் முகமூடி அணிந்து கொண்டிருப்பவர் கே. ஆர். ராமசாமி.



டி. பாலசுப்ரமணியம்

டி. கே. பட்டம்மாள்

முன்வினை

நாகர்கோயில்
மகாதேவன்

சிறு கதை

அந்தச் செய்தி வந்து அதிக நாட்களிராது. மிக சமீபத்தில்தான் பத்திரிகைகளில் அச் செய்தியைப் படித்தேன் — அநேகமாக உங்கள் கண்களிலும்கூட அது தென்பட்டு, பிரமிப்பை உண்டு பண்ணியிருக்கலாம்.

“இளங் காதலர்கள் பரிதாபக்கொலை, பன்றியின் வயிற்றில் யானைக்குட்டி, மூன்று காலும் ஒன்றேமுக்கால் கண்ணுமுள்ள குழந்தை” — இத்யாதி வியப்பூட்டும் செய்திகளின் வரிசையில் சேர்ந்ததல்ல நான் குறிப்பிடுவது. “தமிழ்ப்பட உலகில் மிகப் பிரபல டைரெக்டர் — அற்புதமான படங்களைத் தயாரித்தவர் — உயர்ந்த குணங்கள் அமையப் பெற்றவர் — புரட்சிகரமான தேசீயவாதி — நல்ல எழுத்தாளர் — பெரிய படிப்பாளி” என்றெல்லாம், ரஸிகர்களாலும், சினிமா உலக பிரஜைகளாலும் போற்றப்படும் ஸ்ரீமான் ராகவன் பட உலகை விட்டு நீங்கிவிட்டார் என்பதுதான் அச்செய்தி. “இதிலென்ன வியப்பு? வேண்டுமளவு சம்பாதித்திருப்பார். போதும் சினிமாப் பிழைப்பு என்றெண்ணி விலகியிருப்பார்; அவ்வளவுதானே?” என்று கேட்கலாம். கேள்வி என்னவோ ரொம்பவும் நியாயமானதுதான் — ஆனால்.... இது ராகவனுக்கு மட்டும் பொருந்தாது. “எப்படி?” என்று கேட்கிறீர்களா? அதைத்தான் சொல்லப் போகிறேன். வெறும் கதை என்று மட்டும் முடிவு கட்டி விடாதீர்கள். உண்மையாக நடந்த சம்பவம்தான்; பெயரை மாத்திரம் மாற்றி, அங்கங்கே என் கை வரிசையை சிறிது காட்டியிருக்கிறேன். இல்லாவிட்டால் நானும் ஒரு எழுத்தாளன் என்று எப்படிச் சொல்லிக் கொள்ள முடியும்?

2

1942-ம் வருஷம் மற்றவர்களுக்கு எவ்வளவு முக்கியத்வம் வாய்ந்ததோ தெரியாது; ஆனால் என் வாழ்க்கையில் மட்டும் அது ஒரு மறக்க முடியாத வருஷம் என்றுதான் சொல்லவேண்டும். அப்போது நான் சேலத்திலிருந்தேன். அதற்கு முந்திய வருஷம்தான்... நான்கு வெற்றிகரமான படையெடுப்புகளுக்குப் பிறகு, எஸ்.எஸ். எல். ஸி. தேறியிருந்தேன். “இங்கு வந்தால் ஏதாவது வேலை பார்க்கலாம்” என்று என் நண்பன் மூர்த்தி எழுதியிருந்தான். அவன் வார்த்தையை நம்பி, பிறந்து வளர்ந்த ஊரை விட்டு, பிழைப்புத் தேட சேலம் வந்தேன். ஒரு வருஷ

காலம்...வேலையொன்றும் கிடைக்கவில்லை. என்னைப் போலவே, வேலை கிடைக்காமல் திண்டாடும் பலர் இருந்தார்கள்—எல்லோரும் ஒரே வீட்டில் தான் வசித்து வந்தோம். இனம் இனத்தோடு தானே சேரும்? வேலை கிடைக்காவிட்டாலும் எங்களுக்கு ஒரு குறைவும் ஏற்படவில்லை. சதா சர்வகாலமும் சீட்டாடுவதும் அரட்டையடிப்பதுமாக இருந்தால் கவலைப்படுவதற்கு நேரம் எங்கே கிடைக்கும்?

எங்கள் "சோதா" கோஷ்டியில் நன்றாகப் பாடக்கூடிய சிலரும் இருந்தார்கள். எனக்கு சிறிது எழுத வரும்: மனம் போனபடி மெட்டமைத்து பாட்டெழுதுவேன். அதை தங்களை ஏழரைக் கட்டை தொண்டையினால் பாடி... தெரு பூராவும் ஒலி பரப்புவார்கள் என் நண்பர்கள்.

திடீரென ஒரு நாள் மூர்த்தி என்னிடம் "கோபு; நீ நல்லதாக ஒரு நாடகம் எழுது: நாங்கள் நடிக்கிறோம். இவ்வூர் கலா ரஸிக சபாவின்

காரியதரிசியை எனக்கு நன்றாகத் தெரியும்: அவரிடம் சொல்லி நாடகம் நடத்த ஏற்பாடு செய்கிறேன்" என்றான்.

"ஆகா அற்புதமான யோசனை" என்று பின்பாட்டுப் பாடினார்கள் என் நண்பர்கள்.

வெறும் யோசனை வெகு சீக்கிரத்தில் உண்மையாகிவிட்டது. நான் எழுதிய "புயலும் படகும்" என்ற கதை நாடக ரூபமாகியது. நல்லதொரு நாளில், கலா ரஸிக சபாவில், ஏராளமான ரஸிகர்களின் முன்பு எங்களுடைய நாடகம் நடந்தது.

நானோ அல்லது எங்கள் கோஷ்டியைச் சேர்ந்த வேறு யாருமோ......நாடகம் நன்றாக இருக்கும் என்று கனவில் கூட நினைத்தது கிடையாது. மூர்த்தியின் அசட்டுத் துணிச்சல் எங்களை மேடை மீது கொண்டு நிறுத்திவிட்டது. நாய் வேஷம் போட்ட பிறகு குரைக்காமலிருக்க முடியுமா?



ஆனால் நடந்தது வேறு விதமாகி விட்டது. ஒருவரும் நினைத்திராத அளவில் எங்கள் நாடகம் மிக மிகப் பிரமாதமாக அமைந்தது. எல்லோரும் வெகுவாகப் பாராட்டினார்கள். நாடகத்தை விட அதன் கதை அமைப்பே ரொம்பவும் மேலாக இருந்ததாம். நாடகம் முடிந்தவுடன், பெரிய மனிதர் போல் உடையணிந்த நடுத்தர வயதுடைய ஒருவர் மேடை மீது ஏறி வந்தார். காரியதரிசியிடம் ஏதோ ஜாடை காட்டினார். அவர் என்னைக் கைப்பிடியாக இழுத்து வந்து அவர் முன் நிறுத்தினார். அந்தப் பெரிய மனிதர் தமது கையிலிருந்த ஒரு பெரிய ரோஜா மாலையை என் கழுத்தில் அணிவித்தார். கட்டிடமே அதிரும்படியான கரகோஷம் வானைப் பிளந்தது. இரைச்சல் சிறிது ஓய்ந்ததும் கணீரென்ற குரலில் அவர் ரஸிகர்களை நோக்கிப் பேச ஆரம்பித்தார்:

"சபையோர்களே, அசட்டுத் தனமாக இவ்வளவு காலமும் தனது திறமைகளையெல்லாம் வெளிக்காட்டாது வாழ்ந்து வந்த ஒரு இளம் எழுத்தாளரை இப்பொழுது உங்களுக்கு அறிமுகம் செய்து வைப்பதில் நான் பெருமையடைகிறேன். (கரகோஷம்). இன்று நாம் பார்த்த நாடகம் மிகப் பிரமாதமாய் இருந்தது என்பதை நான் சொல்ல வேண்டியதில்லை. நீங்களே தெரிந்துகொண்டிருப்பீர்கள். இவ்வளவு அழகான, அபூர்வமான நாடகத்தை நான் இது வரையிலும் பார்த்ததில்லை என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிப்பதோடு, இது வரை நான் டைரெக்ட்

(தொடர்ச்சி 39-ம் பக்கத்தில்)

[illegible]க் கேளுங்கள்

எஸ். சுப்ரமணியம் (ஜயஞவரம்)

யோக மங்களத்திற்கு விவாஹம் ஆகிவிட்டதா? அவருக்கு வயதென்ன? முதன் முதலில் நடித்த படம் எது?

மங்களத்தின் கழுத்தில் இன்னும் மங்கல நாண் ஏறவில்லை. 20 வயதான அவர் முதன் முதலில் நடித்த படம் "தமிழறியும் பெருமாள்".

எம். எஸ். அந்தோனி (கோலார்)

எம். கே. டி. பாகவதர் அடுத்தபடியாக வித்யாசாகர், மெய்ப்பொருள் கண்ட நாயனுர் ஆகிய படங்களில் நடிப்பதாக "குண்டூசி"யில் வெளியிட்டிருந்தீர்கள்; அப் படங்கள் என்னவாயின?

பாகவதர் அடுத்தபடியாக நடிக்கப் போவது "அமரகவி" என்ற படத்தில். அதன்பின் மேற் சொன்ன இரு படங்களையும் அவர் தயாரிக்கக்கூடும்.

ஏ. மஹமத் ஷெரீப் (தஞ்சாவூர்)

ராஜகுமாரி கட்டி வருவது சினிமா தியேட்டரா? அல்லது ஸ்டுடியோவா?

வெகு காலமாக வேலை நடந்து வருகிறதே என்றதனுல் உமக்கு இந்த சந்தேகம் போலும்! அவர் கட்டி வருவது ஒரு தியேட்டர்தான்.

டி. வரதராஜன் (திண்டுக்கல்)

எம். என். நம்பியார், எம் ஜி. ராமச்சந்திரன், நரஸிம்ம பாரதி ஆகியோர் ஜூபிடரின் நிரந்தர நடிகர்களா? ஜூபிடரின் ஸ்டுடியோ விலாஸத்தைத் தெரிவிக்கவும்.

நம்பியாரும், பாரதியும் அங்கு நிரந்தர நடிகர்கள் என்று தெரிகிறது. எம். ஜி. ராமச்சந்திரன் இப்பொழுது மைசூரில் ஒரு படத்தில் நடித்து வருகிருர். "ஸென்ட்ரல் ஸ்டுடியோ, திருச்சி ரோடு, கோயமுத்தூர்" என்பது ஜூபிடரின் ஸ்டுடியோ விலாஸமாகும்.

எஸ். அலி (கஞ்சனூர்)

எம். கே. டி. பாகவதர் நடித்த ராஜமுக்தி ஏன் பிரமாதமான வெற்றியைப் பெறவில்லை?

தமிழ்ப் பட ரஸிகர்களின் விருப்பம் இன்னதுதான் என்பதை யாராலும் கண்டு பிடிக்கவே முடியவில்லை. தோல்வியுறும் என்று எண்ணப்படும் படத்திற்கு பிரமாத வெற்றியையும், பிரமாதமான வெற்றியைப் பெறும் என்று எண்ணப்படும் படத்திற்கோ படுதோல்வியையும் அளித்து வருகின்றனர். ஆதலால், இதற்கு பதில் சொல்ல வேண்டியவர்கள் உண்மையில் பட ரஸிகர்கள்தாம்.

எஸ். சண்முகம் (தி. வி. பேட்டை)

டி. ஆர். மஹாலிங்கத்திற்கு பால்கோவா தயாரிப்பதில் நல்ல அநுபவமுண்டாமே? என் நண்பர் கலியாணத்திற்கு பால்கோவா செய்து தர வருவாரா! அவருக்கு அதற்காக எத்தனை "பீஸ்" கேட்பார்?

மஹாலிங்கத்திற்கு பால்கோவாவைச் சாப்பிடுவதில்தான் நல்ல அநுபவம். நீங்கள் தட்டு தட்டாகக் கொடுத்தாலும் அவர் சாப்பிடுவார்! ஆனல் இதற்காக அவர் "பீஸ்" எதுவும் கேட்கமாட்டார் என்றே நான் நம்புகிறேன்!

வி. மாரியப்பன் (ஒலவக்கோடு)

புஷ்பவல்லிக்குப் பாடத் தெரியுமா?

குமாரி ரத்னம் குரல் இரவல் தரும் போது புஷ்பவல்லிக்கு இதைப் பற்றிய கவலை எதற்கு?

டி. எஸ். வடிவேல் (திருச்சி)

வேலைக்காரியில் டி. எஸ். பாலய்யா பிரமாதமாய் ஆங்கிலம் பேசுகிறாரே? அவர் எதுவரையில் படித்திருக்கிறார்?

“பிறரை ஏமாற்றும் வித்தை”யில் பாலய்யா கைதேர்ந்தவர் என்பதை நீர் அப் படத்தின் மூலமே தெரிந்து கொண்டிருக்கலாமே!

ஏ. முத்துஸ்வாமி (பாலக்காடு)

பி யு. சின்னப்பா, ஆர். ரஞ்சன், எம். கே. ராதா, எம். ஜி. ராமச்சந்திரன், டி எஸ். பாலய்யா ஆகியோரில் வாள் சண்டை போடுவதில் தேர்ந்தவர் யார்?

நம் நடிகர்களில் பெரும்பாலோர் வாய்ச் சொல் வீரர்களேயன்றி வான் போர் வீரர்களல்ல என்பது உமக்கு முன்பே தெரிந்திருக்கும். எனினும், மேற் சொன்னவர்களிடையே ஒரு போட்டியை ஏற்படுத்தினால் நம் சந்தேகம் நிச்சயம் தீர்ந்து விடும். அதே சமயத்தில் ஏராளமான பணத்தையும் வசூலித்து விடலாம்.

ஜோயல் (திண்டுக்கல்)

டி. கே. எஸ். சகோதரர்களின் நாடகக் கம்பெனி இப்பொழுது எங்கு இருக்கிறது?

உமக்குச் சந்தேகம் வேண்டாம்; அது சென்னையிலேயேதான் இருக்கிறது!

சங்கடமான சமையலை விட்டு சினிமாவுக்கு வருவதற்குப் பதில், சினிமாவுக்கு வந்தபின் அந்த வேலையை ஏற்றுக்கொண்டிருக்கிறார் காமெடியன் சாரங்கபாணி! சிலகாலம் தயாரிப்பு நின்றிருந்து இப்பொழுது, புத்துயிர் பெற்றுள்ள “சிவயோகி”யில் அவர் அடுப்பூதி அவஸ்தைப் படுவதைப் பார்த்து நாம் சந்தோஷிக்கப் போகிறோம்.

"பவளக்கொடி"யில் ராஜ குமாரியின் தோழியாக நடிக்கிறார் குமாரி ராஜம். இவருக்கு படம் பூராவும் நிறையப் பேசவும், நடிக்கவும் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

ந. சண்முகசுந்தரம்
(திருநெல்வேலி)

என். எஸ். கிருஷ்ணனின் விலாஸத்தை அவசியம் தெரிவிக்கும்படி வேண்டிக் கொள்ளுகிறேன்.

நெ. 6 வெங்கட்டராமய்யர் தெரு, தியாகராய நகர், சென்னை-17 என்று எழுதும்.

கே. ஓ. தனுஷ்கோடி
(சிராப்பள்ளி)

எம். வி. ராஜம்மா யாரை மணந்து கொண்டிருக்கிறார்? அவருடைய கணவருக்கு என்ன வேலை?

சுமார் பதினொரு வருஷங்களுக்குமுன் ராஜம்மா கன்னட நாடக நடிகர் வீரப்பா என்பவரை மணந்து கொண்டார். ஆனால் அதெல்லாம் பழைய விஷயமாகி விட்டது இப்பொழுது.

எம். எம். சுந்தரம் (மதுரை)

பாழாய்ப் போன பரீக்ஷை அடுத்த மாதம் வருகிறது. அது முடியும் வரையில் தங்கள் மூளையை எனக்கு இரவல் தந்து வைக்க முடியுமா?

என் மூளை மட்டும் சரியாய் இல்லாமலிருந்தால் உம் யோசனைக்குப் பேசாமல் சம்மதம் தெரிவித்திருப்பேன்! அதிருக்கட்டும்; என்னுடைய மூளையை இரவல் வாங்கிக்கொண்டு ராஜகுமாரியைப் பற்றியும், மஹாலிங்கத்தைப் பற்றியும் நீர் பரீக்ஷையில் எழுதினீரானால் பைத்தியக்காரப் பட்டம்தான் கிடைக்கும் என்பது உம் மூளைக்கு எட்டாதததற்காக ஆச்சரியப் படவில்லை!

பி. எஸ். பழனிவேலு
(நாவலபிட்டிய)

இந்தியாவில் முதன் முதலாகத் தயாரித்த சிங்களப் படம் எது?

"இழந்த உறுதி" என்ற சித்ரகலா மூவிடோன் தயாரிப்பாகும்.

லக்ஷ்மணசாமி (இராசிபுரம்).

பி. எஸ். சரோஜா முதன் முதலில் நடித்த படம் எது? தற்போது எந்தப்

படத்தில் நடித்து வருகிறார்? அவர் யாரை மணந்து கொண்டிருக்கிறார்?

"மதனகாமராஜன்", "மங்கம்மா சபதம்", "கண்ணகி" போன்ற சில படங்களில் 'பேசாமடந்தை'யாக நடித்தும் நடனம் ஆடியும் இருக்கிறார். "விகடயோகி"யில்தான் அவர் பாத்திரம் ஏற்று நடித்தார். "தேவ மனோஹரி", "பாரிஜாதம்" "இன்ப வல்லி" "நாட்டிய ராணி" ஆகிய படங்களில் நடித்து வரும் அவர் போலோ நாத்தை மணந்து கொண்டிருக்கிறார்.

எஸ். டி. & கே. ஆர்.
(நீர்மகாக்காபள்ளி)

என் நண்பர் சினிமாவில் சேர்ந்து குமாரி கமலாவை மணந்து கொள்ள விரும்புகிறார். நீங்கள் என்ன சொல்லுகிறீர்?

உம் நண்பர் இந்த ஜென்மத்தில் மட்டுமல்ல, அடுத்த ஜென்மத்திலும்கூட பைத்தியக்காரராகவே இருக்க விரும்புகிறார் என்றுதான் நான் கூறுகிறேன்!

த. மு. நாஸீம் (மண்ணடி)

டைரெக்டர் எப். நாகூருடைய விலாஸத்தைத் தெரிவிக்கவும்.

c/o நியூடோன் ஸ்டுடியோ, கீழ்ப்பாக்கம், சென்னை—என்று எழுதினால் போய்ச் சேரும்.

"காதறுந்த ஊசி" (போடி)

சினிமாவில் கிருஷ்ணன் வேஷத்தில் தோன்றுகிறார்களே அவர்களுக்கு கீதையில் ஒரு வார்த்தை யாவது தெரியுமா?

உண்மையில் இல்லாததை இருப்பதாகக் காட்டுவதுதானே நடிப்பு!

ஜி. புருஷோத்தமன்
(நெல்லிக்குப்பம்)

டைரெக்டர் எல்லிஸ் ஆர். டங்கன் எந்த மதத்தை, எந்த ஊரைச் சேர்ந்தவர்?

டங்கன் ஒரு அமெரிக்க கிறிஸ்தவர்.

நெ. தாஹா (புத்தளம்)

எம். கே. ராதா படங்களில் நடிப்பதை நிறுத்தி விட்டாரா, என்ன?

அவர் அப்படி யொன்றும் செய்துவிடவில்லை. அடுத்தபடியாக அவர் ஜெமினி தயாரிக்கும் படம் எதிலாவது நடிக்கக் கூடும்.

என். பி. கே. கனி (பினாங்கு)

எம். எஸ். சுப்புலக்ஷ்மி ஏன் படங்களில் நடிப்பதை நிறுத்திவிட்டார்?

இப்பொழுதெல்லாம் அவருக்கு இடிந்த கோபுரங்கள், பாழடைந்த பள்ளிக்கூடங்கள் இவைகளைப் புதுப்பிப்பதற்காக உதவிக் கச்சேரிகள் செய்வதற்கே பொழுது சரியாய் போய் விடுகிறது. கொஞ்ச நஞ்சம் அவகாசம் இருந்தால் ஒரு நேருவோ, படேலோ அவருடைய "கச்சேரி கேட்பதற்காக" சென்னைக்கு வந்து விடுகிறார். அவரென்ன செய்வார் பாவம்!

கே. வி. கே. (கும்பகோணம்)

சினிமா நக்ஷத்திரங்கள் சிலருக்குக் கணவன்மார்கள் இருக்கிறார்களே, அவர்களைப் பற்றி உம்முடைய அபிப்பிராயம் என்ன?

"பவளக்கொடி"யில் டி. ஈ. வரதன் அர்ஜுனனாகவும், எம். எஸ். ஸரோஜினி அல்லிராணியாகவும் நடிக்கின்றனர்.

பிரபல எஸ். ஜி. கிட்டப்பாவின் மருமானை எஸ். ஜி. கங்காதரன் பம்பாய் ஸ்டேட் புரொடக்ஷன்ஸாரின் "கனகாங்கி" தமிழ்ப் படத்தில் கதாநாயகனாக நடித்து வருகிறார்.

பாவம், அவர்கள் பொறுமைக் களஞ்சியங்கள்! நக்ஷத்திரங்களின் "வெள்ளிக் கூஜாக்கள்" என்று அவர்களை அழைத்தாலும் பொருந்தும். அவர்கள் நக்ஷத்திரங்களுடன் படாடோபமாய் பவனி வருவார்கள். தமக்கு வேண்டும்போது அவர்களை நக்ஷத்திரங்கள் பயன் படுத்திக் கொள்ளுவார்கள். மற்ற வேளைகளில் "சிவனே" என்று சும்மா குந்தி யிருப்பார்கள்!

எம். கண்ணையன் (ஈரோடு)

வசுந்தரா தேவிக்கு எத்தனை குழந்தைகள்? அவரது சொந்தப் படமான தீபாவளியில் பி. யு. சின்னப்பா நடிக்கிறாரா?

அவருக்கு மொத்தம் மூன்று குழந்தைகள் உள்ளன. படத்தை வெளியிடுவதைவிட இரட்டைக் குழந்தைகளைப் பெறுவது வேண்டுமானாலும் சுலபம் என்று அவர் இப்பொழுது தெரிந்து கொண்டிருப்பார். சின்னப்பா "தீபாவளி"யில் நடிப்பதாய்க் கூறுவதெல்லாம் வெறும் வதந்தி.

க. சுந்தரம் (பம்பாய்)

ஹிந்தி சந்திரலேகாவில் ரஞ்சன், ராதா, ராஜகுமாரி ஆகியோரின் வசனங்கள் அவர்களாலேயே பேசப்பட்டவையா?

ஆம்; அவர்களேதான் பேசியுள்ளனர்.

கே. கே. எச். ஹமீது (நாரளை)

நாகய்யா, பாலய்யா இவ்விருவருள் எவர் சிறந்த நடிகர்?

இந்திய நடிகர்களுள் நாகய்யாவுக்கு இணை அவரேதான். ஆனால் பாலய்யாவும் ஒரு திறமையுள்ள நடிகர்தான்.

எம். கைலாசம் (கிருஷ்ணாபுரம்)

நல்ல தம்பியில் என். எஸ். கே. "தென்னை மரத்துக்கும், பனைமரத்துக்கும், ஈச்சமரத்துக்கும் விடுதலை" என்று பாடுகிறார். தென்னை மரத்திலிருந்து தேங்காய் பறிக்கிறார்கள். பனைமரத்திலிருந்து பதனி இறக்குகிறார்கள். ஈச்சமரத்திலிருந்தோ ஈச்சம் பழம் பறிக்கிறார்கள். ஆதலால் அவர் இவைகளுக்கும் விடுதலை பாடியது தவறல்லவா?

இந்த மரங்கள் "காமன் வெல்த்"திலிருந்து இன்னும் விடுதலை பெறவில்லை என்று சொல்கிறீர்; அவ்வளவுதானே!

மு. கணேசன் (தேவகோட்டை)

சந்திரமாலா என்ற படத்திலிருந்து முன்பு குண்டூசியில் வெளியிட்டிருந்தீர்களே. அப் படம் என்னவாயிற்று?

மைசூரில் தயாராகி வந்த அப் படம் மைசூர் மண்ணிலேயே புதைக்கப் பட்டு விட்டது!

ஏ. எச். அன்வார்பாக்ஷா (இரவாஞ்சேரி)

வேலைக்காரி படத்தில் எம். என். நம்பியார் பாடும் பாட்டுகள் அவராலேயே பாடப் பட்டவையா?

இல்லை; அவரே பாடியதாக 'தம்பி'யார் ஏமாறச் சொன்னது? அவருக்குப் பதில் எம். எம். மாரியப்பா பாடிவிருப்பதாக நினைக்கிறேன்.

எஸ். முத்து (மதுரை)

பி. எஸ். கோவிந்தன் தற்போது எந்தப் படத்தில் நடித்து வருகிறார்?

எதிலுமில்லை.

ஏ. கே. சாமி (கொண்டப்பட்டி)

பிரபல நடிகர் ரஞ்சனுக்கு விமானம் ஓட்டத் தெரியுமாமே. மற்ற நடிக நடிகைகள் யாருக்கேனும் விமானம் ஓட்டத் தெரியுமா?

மற்ற நடிக நடிகைகளுக்கும் விமானம் ஓட்டத் தெரிந்திருந்தால், அவர்கள் ஆகாயக் கோட்டை கட்டுவதோடு நில்லாமல் அதில் போய் குடியேறுவதும் சாத்தியமாக இருக்குமல்லவா?

"மதி" (காவேரிப்பட்டினம்)

சினிமா நக்ஷத்திரங்கள் எப்பொழுதுமே இளமையாக இருக்கத்தானே பிரியப்படுகிறார்கள்?

ஆம்; பிரியப்படுவது அதுதான். ஆனால் நடப்பதென்னவோ வேறு.

ஏ. ஜே. அப்தீன் (தங்கச்சிமடம்)

ராஜமுக்தியில் நடிக்கும் எம். ஜி. ராமச்சந்திரனும். எம். ஜி. சக்ரபாணியும் உடன் பிறந்த சகோதரர்கள் தானா?

ஆம்; சகோதரர்கள் தாம்.

பி. சிதம்பரம் (இராசிபுரம்)

எம். எஸ். சுந்தரி பாய் முதன் முதலில் நடித்த படம் எது?

காபியாஸ்பிரின் தலைவலி மாத்திரை விளம்பரப் படம்.

எம். ஹமீதுமாலீன் (நாகூர்)

தவமணிதேவி இப்பொழுது என்ன செய்து கொண்டிருக்கிறார்?

சினிமாவில் நடிப்பதைத் தவிர வேறு என்னென்னவோ செய்து கொண்டிருக்கிறார். அதைப் பற்றியெல்லாம் என்னிடம் கேட்க வேண்டாம்.

கே. எஸ். மணியன் (கோயமுத்தூர்)

பாகவதர் நடிக்கப் போகும் அமரகவி படம் எந்த ஸ்டுடியோவில் தயாரிக்கப்படப் போகிறது? சென்னையிலா, அல்லது புனாவிலா?

சென்னை நியூடோனில் இப் படம் தயாரிக்கப்படும்.

"சிங்கர் ஊசி" (கோலார்)

நக்ஷத்திரங்களுக்கு வருமானம் அதிகரிக்க அதிகரிக்க அவர்களது உடல் பருமனும் அதிகரிப்பது எதனால்?

ரேஷன் கடுமையாக உள்ள காரணத்தினால் அவர்கள் அரிசிக்குப் பதில்

இப்பொழுது வெளியூர்களில் வெளிவந்து ஓடிக்கொண்டிருக்கும் "விநோதினி" தமிழ்ப் படத்தில் பழங்கால நடிகரான காமெடியன் எம். வி. ராஜுவும் நடிக்கிறார்.

"பவளக்கொடி" படம் தயாராகி வந்தபோது எடுக்கப்பட்ட போட்டோ இது, டைரெக்டர் ஸ்ரீராமுலு நாயுடு டி. ஆர். மஹாலிங்கத்தின் தோள்மேல் கையைப் போட்டுக்கொண்டு டி. ஈ. வரதனிடம் ஏதோ தமாஷ் செய்கிறார். அதைக் கேட்டு டி. ஆர். ராஜகுமாரியும், குமாரி ராஜமும், தோழிகளும் சிரித்து மகிழ்கின்றனர்.

பணத்தையே சாப்பிட்டுப் பருக்கிறார்களோ என்று நீர் நினைக்கிறீர் போலும்!

டி. எஸ். வீரபத்திரன் (தாயனூர்)

நல்ல தம்பி படத்திலிருந்து தணிக்கை போர்டார் சில காட்சிகளை நீக்கச் செய்து விட்டார்களாமே? அவை என்ன காட்சிகள்?

இவ்வளவு கற்பனையுள்ள உமக்கு அவை என்ன காட்சிகள் என்பதையும் கற்பனை செய்து கொள்ள முடியவில்லையா, என்ன!

ஏ. பெரிய கருப்பத்தேவர் (மாவிலிட்டி)

பி. யு. சின்னப்பா தற்போது எந்தப் படத்தில் நடிக்கிறார்?

அவர் இப்போது ராயல் டாக்கீஸாரின் "சுதர்ஸன்", முருகன் டாக்கீஸாரின் "ரத்ன குமார்", பாக்யா பிக்சர்ஸின் "மங்கையர்க்கரசி" ஆகிய படங்களில் நடித்து வருகிறார்.

குண்டூசி அன்பன் (பங்களூர்)

நம் பட முதலாளிகள் லலிதா—பத்மினி சகோதரியரை தம் படங்களுக்கு ஊறுகாய் போல உபயோகித்து வருவதன் காரண-மென்ன?

வெறும் ஊறுகாய் என்று சொன்னால் போதாது. படங்களை ஓட்டுவதற்கு இவர்களது நாட்டியம் 'கொறடா'வாகப் பயன்படுகிறது!

ஆர். சாத்தையா (முதுகுளத்தூர்)

எம். வி. ராஜம்மாவுக்கு தற்போது வயது என்ன?

மூன்று வருஷங்களுக்கு முன் தமக்கு 26 வயதாவதாக என்னிடம் அவர் சொன்னார். ஆனால் அவருக்கு சமீப காலமாய் பால்யம் திரும்பி வருவதாக தம் பட முதலாளிகள் கருதுவதால், அவரது வயதைக் கூட்டிச் சொல்வதா குறைத்துச் சொல்வதா என்று எனக்குத் தெரியவில்லை!

வி. எஸ். எஸ். சங்கரன் (டில்லி)

ஹிந்தி சந்திரலேகா இவ் வருஷத்திய சிறந்த படமாகத் திகழும் என்று நம்புகிறேன்.

இப் படத்திற்கு வட இந்தியாவில் கிடைத்து வரும் வெற்றியைப் பற்றிக் கேள்விப் படும்போது உம் நம்பிக்கை வீண் போகாதென்றே தோன்றுகிறது.

கேள்வியாளன் (பங்களூர்)

இந்தியாவில் இன்னும் ஏன் டெக்னிக் கலர்ப் படத் தயாரிப்பு ஆரம்பிக்கப் படவில்லை?

டெக்னி கலர்ப் படம் தயாரிப்பது லேசான காரியம் அல்ல நஷ்டம் ஏற்பட்டால் சாதாரணப் படத்தைப் போல் பத்து பங்கு ஆகும். நம் பட முதலாளிகள் கருப்பு-வெள்ளைப் படங்களையே வெற்றிகரமாய்த் தயாரிக்கத் தெரியாமல் தவிக்கிறார்கள். டெக்னிக் கலர் படத்தைப் பற்றிக் கேட்பானேன்.

எம். பி. வஸந்தன் (பங்களூர்)

நம் படங்களில் பின்னணி சங்கீதக் கலை மிக அபிவிருத்தி அடைந்திருக்கிறது. இதை மேலும் வளரச் செய்ய என்ன செய்யலாம்?

நம் படங்களில் பின்னணியில் கேட்கும் இரைச்சலை நீர் சங்கீதம் என்று கூறுகிறீர்! உண்மையில் நம் படங்களில் பின்னணி சங்கீதம் விருத்தியடைய வேண்டுமானால், தற்போதுள்ள சங்கீத டைரெக்டர்களை முதலில் வீட்டிற்கு அனுப்பி வைக்க வேண்டும்!

டி. ஈ. சாமையா (ராபர்ட்ஸன்பேட்டை)

ஒரு நடிகையிடம் மிக்க உயர்வாய் நீங்கள் மதிக்கும் குணம் எது?

தன் கற்பைப் பற்றி வானளாவ சிலாகித்துப் பேசிக்கொள்ளாம விருப்பதைத் தான்.

கே. பிரான்ஸிஸ் பெர்னாண்டோ (கொழும்பு)

நாகர் கோயிலில் மஹாத்மா காந்தியின் பிரம்மாண்டமான சிலை ஒன்றை என். எஸ். கிருஷ்ணன் நிர்மாணித்து வருவதாக கேள்விப் படுகிறேன். இது உண்மைதானா?

காந்தி உயிருடனிருந்தபோது சில சுய நலமிகள் அவரை தரிசிப்பதற்கே வெட்கப்பட்டார்கள். ஆனால் இத்தகையவர்களெல்லாம் இப்பொழுது தைரியமாய் காந்தி படத்தையும், காந்தி சிலையையும் வணங்கவும் முற்பட்டிருக்கிறார்கள். ஆகவே நீர் தெரிவிக்கும் செய்தி உண்மையாயிருக்குமானால், மேற்படி ரகத்தவர்களுக்கு என். எஸ். கே. கோவில் கட்டிய மாதிரியேயிருக்கும்.

கே. ராமையா (ஆலங்குடி)

எம். எம். தண்டபாணி தேசிகர் முதன் முதலில் எந்தப் படத்தில் நடித்தார். அவர் இப்பொழுது ஏன் படங்களில் நடிப்பதில்லை?

பானுமதியின் (துளஸி) பூஜை இடையே (கரடியல்ல!) சின்னப்பா தோன்றும் இக்காட்சியை "ரத்னகுமாரி"ல் காணலாம்.

தேசிகர் முதன் முதலில் படத்தில் பட்டினத்தாராய் தோன்றினர். பிறகு அவர் மேலும் சில சிவ பக்தர்களின் வேஷங்களிலேயே தோன்றி நடித்தார். முதலில் சிவ பக்தராக இருந்து பிறகு விஷ்ணு பக்தராய் மாறிய "திருமழிசை ஆழ்வாராக" சமீபத்தில் அவர் நடித்து முடித்தார். இப் படம் டப்பாவிலிருந்து வெளிப்பட்டு தியேட்டருக்குப் பின் தியேட்டராய் ஓடுவதற்குப் பதில், டப்பாவுக்குள்ளிருந்தபடியே கைக்குப் பின் கை மாறிக் கொண்டு வருகிறது. சென்ற ஒன்றரை வருஷ காலமாக நியூடோனில் நிஷ்டையிலிருந்த (தேசிகர் நடிக்கும்) "சிவயோகி", இப்பொழுது நிஷ்டை கலைந்து நடமாட ஆரம்பித்திருக்கிறார்.

எம். பி. அப்துல்லா (திருச்சி)

டி. ஆர். மஹாலிங்கம், எம். கே. டி. பாகவதர், சின்னப்பா, ஹொன்னப்பா, பி. எஸ். கோவிந்தன் ஆகியோரில் சங்கீதப், நடிப்பு இலைகளில் யாருக்கு முதல் ஸ்தானம் அளிக்கலாம்?

தற்போது மஹாலிங்கத்தின் நடிப்பிற்கும், பாட்டிற்குமே ஏராளமான கிராக்கி இருந்து வருகிறது.

பி. ஆர். ராமன் (திருப்பாபுலியூர்)

வேலைக்காரி படத்தில் பரம ஏழையான படிப்பு அதிகமற்ற ஆனந்தன் வக்கீலாக நடிப்பது பொருந்துமா? அதோடு கூட வக்கீல் என்பதற்கான அத்தாட்சிப் பத்திரத்தைக் காட்டாமல் யார் வேண்டுமானாலும் கோர்ட்டில் வக்கீலாக வாதிக்கலாமா? இது தவறல்லவா?

இந்தக் கதையில் இது மாதிரி ஓட்டை கண்டு பிடிப்பதானால் நிறைய இருக்கின்றன. ஒரு வேளை "மோஹினி"யைத் தயாரித்தவுடனடியாக அதே கேமிராவால் இப் படத்தைத் தயாரித்ததால் இப் படத்திலும் சில நம்ப முடியாத விஷயங்கள் புகுந்து விட்டிருக்கலாம்!

எம். எம். ராமசாமி
(ஒண்டிப்புதூர்)

வேலைக்காரியில் மூர்த்தியாக நடிக்கும் எம். என். நம்பியாருடன், வஸந்த மாளிகையில் சண்டை செய்யும் ஹரிஹரதாஸும் நம்பியார் தானா?

ஆம்; அந்த இரண்டு வேஷங்களிலும் நம்பியாரேதான் நடிக்கிறார்.

யு. கே. கிருஷ்ணசாமி (மைசூர்)

சினிமா நக்ஷத்திரங்கள் பகலில் பிரகாசிக்குமா?

இரவில் அவர்கள் திரையில் பிரகாசிப்பார்கள். பகலில் அவர்கள் மீதுள்ள வைரங்கள் பிரகாசிக்கும்!

டி. ஆர். பாக்கியம் (இலங்கை)

என் சிநேகிதி ஒருத்தி தன்னைச் சினிமாவில் சேர்த்து விடும்படி என்னைக் கெஞ்சி மன்றாடுகிறாள். இதற்கு நான் என்ன செய்வது?

நீர் இதற்காக பட முதலாளிகளைக் கெஞ்சி மன்றாடினாலும் இது சுலபமாய் நடக்கக் கூடிய காரியமல்ல என்பதை உம் சிநேகிதிக்குத் தெரிவியும்.

ரூ. தாமோதரம்
(ஈப்போ, மலேயா)

ராமசாமியும், பாலய்யாவும் வேலைக்காரி படத்தில் அந்தப் பிணத்தைக் கண்டதும் ஏற்படும் திகைப்பை ஏன் சரியாக நடிக்கவில்லை?

அங்கிருந்தது உண்மையில் பிணமல்ல என்று அவர்களுக்குத் தான் முன்பே தெரியுமே!

எம். கே. தியாக முஹைதீன்
(நீர் கொழும்பு)

சேலம் மாடர்ன் தியேட்டர்ஸார் முதன் முதலில் தயாரித்த படம் எது? அதை டைரெக்ட் செய்தவர் யார்?

மாடர்ன் தியேட்டர்ஸாரின் முதல் படம் சதி அஹல்யா, அதை டி. ஆர். சுந்தரம் தான் டைரெக்ட் செய்தார்.

என். எஸ். மூத்து (மலேயா)

தமிழ் சந்திரலேகாவில் நடுவில் ஹிந்தி சம்பாஷணைகளைப் புகுத்தியிருக்கிறார்களே. ஹிந்தி சந்திரலேகாவில் அதே போல் தமிழ் சம்பாஷணைகளைப் புகுத்தியிருக்கிறார்களா?

இல்லை.



பானுமதி பிச்சைக்காரியாய் தோன்றி னுல் காசை மட்டுமென்ன ; உள்ளங் களையுங் கூட பறி கொடுப்பார்கள் சினிமா ரஸிகர்கள். (ரத்னகுமார்)

வளைக்கொடி

பவளக்கொடி

ல்பனை.

வெளியூர்களில் இப்பொழுது வெளி
வந்துள்ள "வினோதினி"யின்
விரோதினி தனலக்ஷ்மி.

இனிய குரலில் கடும் மொழிகளைப்
பேசி அர்ஜுனனை அலற வைக்கும்
அல்லிராணி. (பவளக்கொடி)

„பவளக்கொடி"யை அர்ஜுனனை (வரதன்) அடைவதற்கு என்ன வழி செய்யலாமென்று யோசிக்கிறார் கிருஷ்ணன் (மஹாலிங்கம்)

முன் வினை

[21-ம் பக்கத் தொடர்ச்சி]

செய்த படங்களெல்லாம் இந்த நாடகத்தின் காலில் கட்டியடிக்கக் கூட தகுதியில்லாதது என்பதையும் தைரியமாக எடுத்துக் கூறுகிறேன். (பெரும் சிரிப்பும், கரகோஷமும்) இந்த நாடகத்தை அழகாக எழுதியவரும், இதோ மாலையுடன் நிற்பவருமான ஸ்ரீமான் கோபு அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். அத்துடன் நான் எடுக்கப்போகும் அடுத்த படத்திற்கு கதை, வசனம் எழுதும் பொறுப்பையும் அவரிடம் சமர்ப்பிக்கிறேன்" என்றார். வானத்தை எட்டியது கரகோஷம். அது வரையிலும் அவர் யாரென்பதே எனக்குத் தெரியாது; அவர் பேச்சைக் கேட்டதும் தான் அவர் பிரபல டைரெக்டர் ராகவன் என்பது தெரிந்தது. தாங்க முடியாத பிரமிப்பும், சந்தோஷமும் என்னை மெய்மறக்கச் செய்தன. அவர் கால்களைத் தொட்டு கண்ணில் ஒற்றிக் கொண்டேன்.

*   *   *

பிரபல பட டைரெக்டர் ஸ்ரீமான் ராகவனை எதிர்பாராத விதமாக சந்திக்கப் போகிறோம் என்று நான் நினைக்கவே இல்லை. சந்திப்பினால் இவ்வளவு பெரிய பதவி கிடைக்கும் என்பதையும் நான் எண்ணிக்கூடப் பார்த்ததில்லை. ராகவன் எங்கே? நான் எங்கே? தமிழ்ப்பட உலகில் அவரே தளபதி; அவரது படமென்றால் அதற்கொரு அலாதி மதிப்பு; அவர் கீழ் நடிப்பதென்றால் நடிகர்களுக்கு அளவற்ற பெருமை; மேலும், அவர் வெறும் டைரெக்டர் மட்டுமல்ல, பெரிய அறிவாளி. இத்தகைய மாபெரும் பெருமை வாய்ந்தவரின் படத்திற்குக் கதை எழுதும் பாக்கியம் கிடைப்பதென்றால் அதை சாதாரண அதிர்ஷ்டம் என்று சொல்லிவிட முடியுமா? ஆயினும் நான் அந்த அதிர்ஷ்டத்தைப் பெற்றே விட்டேன். நாடகம் முடிந்த மறு நாள் ஸ்ரீ. ராகவனுடன் நானும் சென்னைக்குப் புறப்பட்டேன். என் நண்பர்களும் — குறிப்பாக — மூர்த்தியும் என்னை ஆசீர்வதித்து அனுப்பினார்கள். அந்தச் சமயத்தில் ஸ்ரீ. ராகவன் மூர்த்தியை ரொம்பவும் கவனமாக உற்றுப் பார்த்தார். நான் அதை கவனித்துவிட்டு "இவன் யாரென்று பார்க்கிறீர்களா?" என்று கேட்டேன்.

"அதெல்லாம் ஒன்றுமில்லை" என்று தட்டுத் தடுமாறி பதிலளித்தார் ராகவன். அப்போது அவர் முகத்தில் ஏற்பட்ட அசாதாரணமான மாறுதலை நான் கவனித்து விட்டேன். ஆனால் அந்த மாறுதலுக்குக் காரணம் என்ன என்பதை மட்டும் என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

3

மூன்று மாதங்கள் ஓடி மறைந்தன. இம்மூன்று மாதங்களுக்குள் நானும் ராகவனும் மிகவும் அன்னியோன்யமாகி விட்டோம். பழகப் பழகத்தான் எனக்கு ராகவனின் அருமையான குணங்கள் தெரியலாயின. அத்துடன் அவரது வாழ்க்கையையும் அறிய முடிந்தது. ராகவன் என்னிடம் ஒன்றையும் மறைத்ததில்லை. தமது கழிந்து போன நாட்களைப் பற்றி அவர் வெகு சுவாரஸ்யமாகச் சொல்லுவார்.

ராகவனது பூர்வீகம் தென்வேலி கிராமம். மிகப் பிரபலமானதொரு வைதீகக் குடும்பத்தில் பிறந்த ஏக புத்திரன் அவர். ஆகவே, ரொம்பவும் செல்லமாக வளர்ந்து வந்தார். பணத்

திலும் செழிப்பான சூழ்நிலையிலும் வளரும் குழந்தைகள் படிப்பு விஷயத்தில் "அஷ்டதரித்திர" மாக இருப்பார்களாம்; அது பொய்யோ, நிஜமோ, ராகவன் மட்டும் வெகு சூடிகையாக படித்து இருபது வயதிற்குள் பி. ஏ. பட்டமும் பெற்று விட்டார். இந்த சமயத்தில்தான் அவரது வாழ்வில் ஒரு அசாதாரணமான சம்பவம் நிகழ்ந்தது.

"தஞ்சாவூர் ஜானகி" என்ற பெயரை நீங்கள் எப்போதாவது கேட்டிருக்கிறீர்களா? அணுகுண்டு சகாப்தத்தில, முழு ஞாபக மறதிப் பிருகிருதிகளாக வாழும் நமக்கு...... நம்முடைய பெயரே ஞாபகமிருப்பதில்லை. இந்த அழகில் "தஞ்சாவூர் ஜானகி" யைப்பற்றி எப்படி ஞாபகமிருக்கும்? ஜானகி அந்த நாளில் மிகவும் பிரபலமான ஒரு நாடக நடிகையாம்; வெறும் நடிகையல்ல; அற்புதமான சாரீரமும் அதற்கேற்ற சங்கீத ஞானமும் பெற்றவளாம். அவள், சொந்தமாக ஒரு நாடகக் கம்பெனி வைத்திருந்தாளாம். ஒவ்வொரு ஊரிலும் ஜெயக்கொடி நாட்டிய அக்கம்பெனி தென்வேலி கிராமத்திற்கு விஜயம் செய்தது. பி, ஏ. பாஸ் செய்த பட்டதாரி ராகவனுக்கு சங்கீத ஞானமும் உண்டு என்பதை முதலில் குறிப்பிட மறந்து விட்டேன். சங்கீத ஞானத்துடன், அவர் பெரிய கலா ரஸிகர். இவ்வளவும் போதாமல், தமிழில் நன்றாக எழுதும் திறமையும் அவருக்கு இருந்தது. காலேஜில் படிக்கும் நாட்களில் அவர் எவ்வளவோ நாடகங்களும், நாவல்களும் எழுதியிருக்கிறார். அவைகளில் பெரும்பாலும் அவ்வப்போது பல பத்திரிகைகளில் வெளிவரவும் செய்ததாம். இத்தனை திறமை வாய்ந்த ஒரு ரஸிகமணி, தஞ்சாவூர் ஜானகியைப் பார்க்காமல்— மன்னிக்கவும் — அவள் நாடகத்தைப் பார்க்காமலிருப்பாரா என்ன? அந்த

உங்களதிர்ஷ்டத்தில் எழுதி இருப்பதென்ன?

நீங்கள் ஒரு வருஷத்திற்குள் நடக்கும் சுபா சுபங்களை அறிந்துகொள்ள வேண்டுமெனில், இன்றே ஒரு கார்டில் உங்களுடைய விலாசம், ஒரு புஷ்பத்தின் பெயர் எழுதியனுப்புங்கள். நாங்கள் ஜோதிஷ சாஸ்திர கணிதப்படி உங்களுக்கு உண்டாகும் லாபநஷ்டங்கள், எந்த வியாபாரத்தால் லாபம் கிடைக்கும், எங்ஙனம் பொருள் சேரும், உத்தியோகம் எப்போது கிடைக்கும், வேலை ஆட்களுடைய அபிவிருத்தி, தம்பதிகளுடைய சௌக்கியம், ஆரோக்கியம், வியாதி, தூரப் பிரயாணங்கள், வியாஜ்ஜியம் அல்லது பரீக்ஷைகளில் தேர்ச்சி, கல்யாணம், பூமி அல்லது ஆஸ்தியினால் சுகம், புதிய நட்பு, உங்கள் கார்டு சேர்ந்தவுடனே மாதவாரி பலனும் வருட பலனும் ரூ. 1-4-0க்கு தபாலில் *V.P.*யில் அனுப்புகிறோம். தபாற் செலவு வேறு; துரதிர்ஷ்டத்தை அதிர்ஷ்டமாக்கிக் கொள்ளவும் வழியுண்டு; எழுதி அனுப்புகிறோம். இதனால் வரப்போகும் கஷ்டங்களிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம். ஒரு முறை பரீக்ஷித்தாலே தெரியும். உங்கள் ஜாதக பலன்களின் திண்மையை தப்பென்று ருஜு செய்தால் கட்டிய பணம் வாபீஸ்செய்யப்படும்.

SHRI SWAMI SATNARAIN JOTISH ASHRAM

(G.D.M.) HOSHIARPUR.

நாடகத்தை ஒரு முறை பார்த்ததுமே ராகவன் சொக்கிப் போய் விட்டார். ஜானகியின் பாட்டும், நடிப்பும், வசீகரமும் ராகவனை நன்றாக மயக்கி விட்டன. நாள் தவறினாலும் ஆசாமி நாடகம் பார்க்கத் தவற மாட்டார் என்ற நிலைமை ஏற்பட்டு விட்டது. அதோடு ஜானகியின் கண்களிலும் அவர் விழுந்து விட்டார்.

ராகவனின் பெற்றோர்கள் பரம வைதீகம்; பிள்ளையின் போக்கு அவர்களுக்குப் பிடிக்கவே யில்லை. பி. ஏ. பாஸ் செய்துவிட்டு, இப்படியா நாடகப் பைத்தியம் பிடித்தலைய வேண்டுமென்பதே அவர்கள் கேள்வி. மேலும் ஊரில் சில நாட்களாக அடிபட்டு வரும் வதந்தியும் அவர்கள் கவலையை அதிகமாக்கியது.

"பண்ணையார் வீட்டுப் பையனுக்கும் நாடகக்காரிக்கும் சிநேகமாமே"—இதுதான் வதந்தி. சாதாரணமாக ஊர் வதந்தியில் உண்மை என்ற அம்சத்தை மருந்துக்குக்கூடக் காண முடியாது. ஆனால் இந்த வதந்தி என்னவோ உண்மையானதுதான்—நாள் தவறாமல் நாடகம் பார்க்க வரும் ராகவனை ஜானகி நன்றாக அறிந்து கொண்டாள். அவரை ஒரு நாள் தனது வீட்டிற்கு அழைத்துச் சென்று, "நீங்கள் உண்மையாகவே நாடகம் பார்க்க வருகிறீர்களா? அல்லது பொழுது போக்க வருகிறீர்களா?" என்று வேடிக்கையாகக் கேட்டாள். ராகவனும் வேடிக்கையாகப் பதிலளித்தார்; சும்மா வளர்த்துவானேன். ராகவன் எழுதிய "கல்யாணி" என்ற நாடகத்தில் ஜானகியும் ராகவனும் நடிப்பது என்ற முடிவில் வந்து நின்றது அந்த சந்திப்பு.

இச் செய்தி ஊரெங்கும் பெரும் பரபரப்பை உண்டு பண்ணியது. ராகவனின் தகப்பனார் அவரை மிகவும் கண்டித்தார். "நல்ல குடும்பத்தில் பிறந்து வளர்ந்த உன் புத்தி இப்படியா கெட்டுப் போக வேண்டும்?



"அட, ராமா! 'பவனக்கொடி'யைப் பார்த்தபின் கிருஷ்ணன்தான் மதுரம்; மதுரம்தான் கிருஷ்ணன் என்று நீங்கள் கட்டாயம் சொல்வீர்கள்.

பி. ஏ. வரைப் படித்த உன் மூளை இப்படியா சீரழிந்து போக வேண்டும்? ஊரெல்லாம சிரிக்கிறதே; என் மானம் போகிறதே" என்று கூச்சலிட்டார். ஆயினும் ராகவனின் மனம் மாறவில்லை; "கல்யாணி" நாடகம் மிக மிக விமரிசையாக நடந்தது. ராகவனும் ஜானகியும் காதலர்களாக நடித்துப் பெரும் புகழ் பெற்றார்கள். நாடகக் காதல் நடப்பிலும் காதலாக மலர்ந்து இருவரும் ஈருடலும் ஒருயிருமாகி விட்டார்கள்.

பண்ணையார் பத்மநாபய்யர் கோபத்தினால் துள்ளி எழுந்தார். "இனி அவன் என் பிள்ளையில்லை: அவனுக்கு எள்ளும் தண்ணியும் வார்த்து விட்டேன்" என்றார். அவரது மனைவி அவரை சமாதானப் படுத்தினாள். "அவன் சிறு பிள்ளைதானே, காலா

காலத்தில் ஒரு கல்யாணம் நடந்திருந்தால் இப்படியெல்லாம் போயிருப்பானா?...ம்.. இப்பொழுது தான் என்ன கெட்டுப் போச்சு? இப்பவே ஒரு பெண்ணைப் பார்த்து அவனுக்குக் கலியாணம் செய்ய ஏற்பாடு செய்யுங்கள்" என்றாள். இந்த யோசனை அவருக்கும் பிடித்திருந்தது. அத்துடன் ஜானகியை இரகசியமாக சந்தித்து சில விஷயங்களைப் பேசவும் அவர் விரும்பினார். ஒரு நாள் ராகவன் வீட்டிலிருக்கும்போது, ஜானகியின் வீட்டிற்குப் போனார். ஜானகிக்கு அவர் யாரென்பது முன்பே தெரியும். மேலும், அவள் நாடகக்காரியானாலும் உயர்ந்த குணமுடையவள். ஆகவே, அவரை மிகவும் அன்பாகவும் மரியாதையாகவும் வரவேற்றாள்.

"அம்மா, நாங்கள் பெரிய குடும்பம். எங்களுக்கு இருப்பதோ ஒரே பிள்ளை. அவனை நல்ல நிலையில் பார்க்க வேண்டுமென்பதுஎங்கள் ஆசை. ஆனால் நீ அதைக் கெடுத்து விட்டாய். போனது போகட்டும். இனி மேலாவது நீ இந்த ஊரை விட்டுப் போய் விடு. நீ இருந்தால் அவன் மனம் மாறவே செய்யாது. உனக்கு எவ்வளவு பணம் வேண்டுமானாலும் தருகிறேன். தயவு செய்து போய் விடு" என்றார் பத்மனாபய்யர்.

ஜானகி சிறிது நேரம் மௌனமாக இருந்தாள். கோடானு கோடி எண்ணங்களும் சிந்தனைகளும் அவள் மனதிலே கிளம்பின. முடிவில் "எனக்கு உங்கள் பணம் தேவையில்லை. என்னால் உங்களுக்கு அவமானமும் இனி ஏற்படாது. நான் இன்றிரவே இந்த ஊரை விட்டுப் போய் விடுகிறேன்... இதை இரகசியமாக வைத்துக் கொள்ளுங்கள்" என்றாள். சாந்தி நிறைந்த உள்ளத்துடன் வீடு திரும்பினார் பத்மனாபய்யர்.

அன்றிரவே தன் வார்த்தைப்படி ஜானகி எங்கேயோ போய் விட்டாள். அவள் மட்டும் தனியாகப் போகவில்லை. ராகவனது அன்பின் அடையாளமாக வயிற்றில் இரண்டு மாதக் கர்ப்பத்துடனும் தான் போனாள். அவள் போன பிறகு தான் ராகவனால் அதை அறிய முடிந்தது. அவர் மனம் துடித்தார். "நம்மை ஏமாற்றி விட்டுப் போயிருப்பாளோ? சே, சே ஒருக்காலுமிராது. பாழாய்ப் போன ஊர் வாய்க்குப் பயந்து தான் போயிருப்பாள்" என்றெல்லாம் எண்ணி எண்ணி மனம் புழுங்கினார்.

அதற்குப் பிறகு இரண்டு வருஷ காலம் ராகவனுக்கு ஜானகியைப் பற்றி ஒரு தகவலும் கிடைக்கவில்லை. ராகவன் அவளைப் பற்றி அறிய மிகுந்த சிரமப் பட்டார். பத்திரிகைகளில் கூட "பிரபல நாடக நடிகை தஞ்சாவூர் ஜானகியம்மாள் இருக்கும் இடத்தைப்பற்றி தகவல் தருபவர்களுக்கு ஆயிரம் ரூபாய் இனாம்" என்று விளம்பரம் செய்து பார்த்தார். எல்லாம் பலனில்லாமல் போய் விட்டது. ராகவன் மனமொடிந்தார். இந்த அழகில் பத்மனாபய்யர் அவனுக்கு கல்யாணம் செய்து வைக்க பிரம்மப் பிரயத்தனம் செய்தார். ஏராளமான, பெரிய இடங்களிலிருந்தெல்லாம் ராகவனுக்குப் பெண் வந்தது. ஆனால் ராகவன் மட்டும் மிகப் பிடிவாதமாகவே இருந்தார். பையனை எப்படி சரி பண்ணுவது என்பது தெரியாமல் பத்மனாபய்யர் விழித்தார். கடைசியில் அவனை மேல் படிப்புக்காக சென்னைக்கு அனுப்பி விடுவதென்றும், சில காலம் அங்கிருந்தால் பையன் முன்போலவே சரியாகி விடுவானென்றும் எண்ணித் தம் கருத்தை ராகவனிடம் தெரிவித்தார். ராகவனுக்கும் இந்த யோசனை பிடித்திருந்தது.

"சிறிது நாளாவது 'கல்யாணம்' என்ற தொந்திரவில்லாமல் இருக்கலாம்" என்ற நினைப்புடன் சென்னைக்கு டாக்டர் படிப்பு படிக்கப் புறப்பட்டார் ராகவன்.

ஆனால், சென்னைக்கு வந்ததும் அவர் மனம் படிப்பில் ஈடுபடவில்லை. ஜானகியின் நினைவே மேலோங்கி

யிருந்தது. இச் சமயத்தில் அவரது வாழ்வையே மாற்றும் ஒரு சம்பவம் இப் பாரத பூமியில் நிகழ்ந்தது.

மோகனதாஸ் கரம்சந்த் காந்தி என்ற பெயருடைய ஒருவர், அடிமை இருளில் மூழ்கிக்கிடந்த இந் நாட்டு மக்களின் உள்ளத்திலே, விடுதலை உணர்ச்சி தீபத்தை ஏற்றி, நாடெங்கும் புரட்சி வெள்ளத்தைப் பரப்பி வந்தார். அப் புண்ணியவானின் கீழ் அச் சமயம், உப்பு சத்தியாக்கிரகம் என்ற புதுமைப் போர் ஆரம்பமாகியிருந்தது. கத்தியின்றி ரத்தமின்றி அஹிம்சை வழியில் நடந்த சத்தியவின் போரிலே எண்ணற்ற மக்கள் எழுந்தோடி வந்து சேர்ந்தார்கள். அரசாங்கம் பயத்தினால் அண்ணலைப் பிடித்து சிறையிலிட்டது. தேசத்தின் பிதாவைக் கைது செய்தது கண்டு மக்கள் வீறுகொண்டெழுந்தனர். மாணவர்களும் இதில் ஈடுபட்டனர்.

இந்தக் கூட்டத்தில் ராகவனும் ஒருவனாக இருந்தார்.

அதிகார வெறி பிடித்த ஆட்சி அநேகரைக் கைது செய்தது. ராகவனும் சிறையிலடைபட்டார். இரண்டு வருஷ தண்டனையை அவர் இன்முகத்துடன் வரவேற்றார். சிறைச்சாலை வாழ்வு, தனது புண்பட்ட ஹிருதயத்திற்கு ஆறுதலளிக்கும் என்பது அவர் கருத்து.

படிக்கப்போன மகன் சர்க்கார் விருந்தாளியாகிவிட்டான் என்ற செய்தி பத்மனையப்பரை கலங்கச் செய்து விட்டது. சென்னைக்கு ஓடோடி வந்தார். மகனை ஜாமீனில் விடுதலை செய்து விடலாமென்று மனப்பால் குடித்தார். சர்க்கார் கை விரித்தது. "உனக்கும் டெப்பே, உன் மகனுக்கும் டெப்பே!" என்று கூறியது. இடிந்த மனதுடன் ஊர் திரும்பினார். மகனை இரண்டு வருஷம்

ரூ. 10,000 இனும்.

தங்கம் தோலா ஒன்று ரூ. 2—8—0

அமெரிக்கன் நியூ கோல்டின் பிராபல்யம்

ஒரு முறை பரீட்சித்தால் எப்பொழுதும் திருப்தி

ஹஸாரிலால் பதன் கோட் எழுதுவது:

"உமது அமெரிக்கன் நியூ கோல்ட் பார்ஸல் கிடைத்தது. எனது நன்றி. இந்த தங்கத்துக்கும் உண்மையான தங்கத்துக்கும் வித்தியாசமே எனக்கு புலனாகவில்லை. மறு தபாலில் தயவுசெய்து எனக்கு 6 தோலா அனுப்புங்கள். மற்ற ஆர்டர்கள் அடுத்து வரும்."

உரைகல் மேல் இந்த தங்கம் உண்மை தங்கத்தின் அடையாளத்தை செய்கிறது. இதை கம்பியாகவும் தகடுகளாகவும் செய்யலாம். இதைக் கொண்டு பலவித ஆபரணங்களும் தயாரிக்கலாம். மிக்க புத்திசாலியான நகை வியாபாரியும் இதை உண்மை தங்கமில்லை என்று கூறுவது அசாத்தியம். மேற்படி சர்டிபிகேட்டை பொய் என்று நிரூபிப்பவருக்கு ரூ. 10,000 இனும் கொடுக்கப்படும்.

இதை பிரசித்தப்படுத்தவே தோலா விலை ரூ. 2-8-0க்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தபால் செலவு பிரத்யேகம். 3 தோலாவுக்கு ரூ. 7. 6 தோலாவுக்கு ரூ. 13. 15 தோலாவுக்கு ரூ 30. 40 தோலாவுக்கு ரூ. 70.

திருப்தியில்லாவிட்டால் பணம் வாபஸ் அனுப்ப உத்தரவாதம்

இலவசம்: மூன்று தோலா வாங்குபவர்களுக்கு பாக்கிங் இலவசம். ஆறு தோலா வாங்குபவர்களுக்கு பாக்கிங்கும் தபால் செலவும் இலவசம்.

IMPERIAL COMMERCIAL COMPANY REGD;

(G. D. M.) JULLUNDER CITY.

கழிந்த பிறகுதான் பார்க்கலாம் என்ற நினைவு அவர் மனைவியைக் கலங்க அடித்தது. இந்த அதிர்ச்சியை தாங்க முடியாமல், மூன்றே நாள் காய்ச்சலுக்குப் பிறகு, அவள் கண்ணை மூடிவிட்டாள். பத்மனாபய்யர் அனாதையானார்.

சிறையில் ராகவன் சந்தோஷமாக இருந்தார். அதற்கு முக்கிய காரணம் ஸ்ரீ. சுந்தரம்தான். சுந்தரம் சென்னையிலுள்ள "சுதந்திரக் கொடி" என்ற பிரபல வாரப் பத்திரிகையின் ஆசிரியர். எதிர்பாராத விதமாக ராகவனும் அவரும் சந்திக்க நேர்ந்தது. இருவரும் உயிர்த் தோழர்களாக மாறி விட்டனர். தண்டனை காலம் முடிவடைந்தது. இருவரும் வெளியே வந்தனர். சுந்தரத்தின் அபிப்பிராயப்படி ராகவன் டாக்டர் படிப்புக்கு ஒரு முழுக்குப் போட்டுவிட்டு, "சுதந்திரக்கொடி" பத்திரிகையின் உதவி ஆசிரியராக அமர்ந்தார். பாவம் பத்மனாபய்யர் தமது பையனின் பிற்கால வாழ்வைக் காணக் கொடுத்து வைக்க வில்லை. மகன் வெளியே வருவதற்குள் அவரும் மனைவி போன இடத்திற்கு போய் விட்டார். மூன்று லக்ஷம் ரூபாயும், சில நிலபுலன்களும் தான் பெற்றோர்களின் "ரெப்ரஸென்டேட்டிவ்"வாக வெளியே வந்த ராகவனை வரவேற்றன.

ராகவன் உதவி ஆசிரியர் வேலையைத் திறமையாகச் செய்து வந்தார். ஏற்கனவே நன்றாக எழுதியவராதலால், அவரது கதைகள் "சுதந்திரக் கொடி"யில் வெளியாகி நல்ல மதிப்பை உண்டுபண்ணின. பேனா முனையில் அவர் பண்ணிய அற்புதங்கள் தமிழ் நாட்டையே சிதறச் செய்தன. அந்தச் சிதறலில் சிக்கித் திணறினார், பிரபல "சந்திரா பில்ம்ஸ்" என்ற சினிமாக் கம்பெனி முதலாளி ஸ்ரீமான் ஆறுமுகம். ராகவனின் கதைகளுக்கிருக்கும் மதிப்பை நினைத்து, அவைகளில் ஒன்றை படமாக்க விரும்பி, ராகவனிடமும் கேட்டார். முதலில் ராகவன் மறுத்தாலும் சுந்தரத்தின் தூண்டுதலால் இசைந்தார். "கல்யாணி" என்ற அவரது பழைய நாடகமே சினிமாவாகியது. இதில் ஆச்சரியம் என்னவென்றால், படத்தை டைரெக்ட் செய்யும் பொறுப்பையும் அவரே ஏற்றுக் கொண்டது தான். சர்வ சாதாரண நடிக நடிகையர்தான் நடித்தனர். படமும் வெளி வந்தது. தமிழ் நாடே கண்டதிசயிக்கும் படியான மாபெரும் வெற்றியும் பெற்று விட்டது. ஒரே படத்தின் மூலம் தமிழ் நாட்டின் முதல்தர டைரெக்டராகி விட்டார் ராகவன். இந்த வெற்றி அவருக்கு உற்சாகமளித்தது. பத்திரிகாசிரியர் வேலையை விட்டு விட்டு பட உலகிற்கே நிரந்தரமாக வந்து விட்டார்.

மளமளவென்று நாலைந்து படங்கள் அவரது டைரெக்ஷனின் கீழ் வெளி வந்தன. ஒவ்வொன்றும் அற்புதமான கலை பொக்கிஷமாக அமைந்தது. அதிகம் சொல்வானேன்? ராகவன் தவறிப் போய் இந்த நாட்டில் பிறந்து விட்டார். இல்லா விட்டால் இன்று ஹாலிவுட் கம்பெனிகள் ராகவனின் முன்பு கை கட்டிக் கொண்டு நிற்கும். இவ்வளவு சம்பவங்களும் அவர் தென்வேலியை விட்டு நீங்கி இருபது வருஷத்திற்குள் நடந்தன. இத்தனை காலமும் அவர் ஜானகியை மறக்கவில்லை. அவரது இருதய பீடத்தில் அசையாது வீற்றிருந்த அவளது ஸ்தானத்தை வேறு எந்தப் பெண்ணாலும் அடைய முடியவில்லை. ஆனால் ஜானகி போனவள் போனவள் தான். அவளைப் பற்றி ஒரு தகவலும் கிடைக்கவில்லை.

4

இது தான் ஸ்ரீ. ராகவன் என்னிடம் கூறிய அவரது வாழ்க்கை வரலாறு:

"கோபு, ஜானகி இப்பொழுது நாற்பது வயதுக் கிழவியாக இருப்பாள்.

அவள் வயிற்றில் பிறந்தது ஆணாக இருந்தால் இன்று இருபது வயதுப் பையனாக இருப்பான். பெண்ணானால் இருபது வயது மங்கையாக இருப்பாள். எப்படியும் நான் அவளை சந்திக்காமல் இருக்கப் போவதில்லை. அதுவரையிலும் இந்த டைரெக்டர் வாழ்வு எனக்கு ஆறுதலளிக்கும்" என்பார் அடிக்கடி என்னிடம்.

நான் எழுதிய "புயலும் படகும்" என்ற கதை, ராகவனால் வேகமாகப் படமாக்கப்பட்டு வந்தது. அந்த சமயத்தில், சேலத்திலிருந்து மூர்த்தி எனக்கொரு கடிதம் எழுதியிருந்தான். "ரொம்பவும் முக்கியமான விஷயம்; உடனே வரவும்" இவ்வளவுதான் அவன் எழுதியவை. மூர்த்தி அனாதைப் பையன்; அவனுக்கு தாயார் மட்டுமே உண்டு. தகப்பனார் யாரென்பதே அவனறியான். எங்கேயோ சிங்கப்பூரில் இருப்பதாக அவன் தாய் என்னிடம் சொல்லியிருக்கிறாள். மஹாலெக்ஷ்மிமாதிரி இருப்பாள். அந்தம்மாளும் மூர்த்தியும் எனது தாயும் தம்பியும் போன்றவர்கள். ஆகவே, மூர்த்தியின் கடிதம் கண்டதும், ராகவனிடம் அனுமதி பெற்றுக் கொண்டு சேலத்திற்கு ஓடோடிச் சென்றேன்.

என்னைக் கண்டதும் மூர்த்தி ஒன்றுமே பேசவில்லை. வீட்டிற்கு அழைத்துப் போனான். அங்கே எலும்பும் தோலுமாய் அவன் தாயார் படுத்திருந்தாள். நான் திடுக்கிட்டு "அம்மாவுக்கு என்ன உடம்பு" என்று கேட்டேன். மூர்த்தி மௌனமாக என்னை தனது அறைக்குள் அழைத்துச் சென்று, "கோபு அம்மாவுக்கு உடம்பில் வியாதி இல்லை. ஆனால் உள்ளம் தான் வியாதியால் உடைந்து விட்டது" என்றான். அவன் பேச்சு எனக்குப் புரியவில்லை. "என்ன சொல்லுகிறாய் மூர்த்தி? அம்மாவுக்கு என்ன மனோவியாதி?" என்று திரும்பவும் கேட்டேன். அவன் பெருமூச்சுடன் "அது பெரிய கதை, கோபு. நேற்று வரையிலும் நான் அம்மாவுக்கு ஜுரம் ஜுரம் என்று



நடனக் கச்சேரிகளில் பின்பாட்டுப் பாடி பிரசித்தி பெற்றுள்ள கோபாலகிருஷ்ணன் இப்பொழுது பிரபல நட்டுவனார் வழுவூர் ராமையா பிள்ளையிடம் அஸிஸ்டென்டாக இருந்து வருகிறார்.

நினைத்து யார் யாரையோ அழைத்து வந்து காட்டினேன். நேற்று இரவுதான் அம்மா என்னிடம் விஷயத்தைச் சொன்னாள். என் தகப்பனார் சிங்கப்பூரில் இல்லையாம். சென்னையில்தான் இருக்கிறாராம். நீ வேலை பார்க்கிறாயே, பிரபல டைரெக்டர் ராகவன், அவர்தான் என் தகப்பனார்!...

" சிறு வயதிலே, இருவருக்கும் ஏற்பட்ட காதல், முற்றுப் பெறாமல் முறிந்து விட்டது. ஜாதியும், குடும்பமும் தான் அப்படி செய்ததாம். இந்தத் தகவலை நேற்றுவரை என்னிடம் சொல்லவில்லை. சொன்னால் நான் வருத்தப் படவேணும். இதைச் சொன்ன பிறகு அவளுக்கு நினைவு போய்விட்டது. இன்று வரை நினைவில்லை. ஆனால் அடிக்கடி 'நீங்கள் வருவீர்களா? என்னை ஏற்றுக்

கொள்வீர்களா? இதோ உங்கள் குழந்தை' என்றெல்லாம் புலம்புகிறாள். என்ன செய்வதென்றே எனக்குத் தோன்றவில்லை. அதனால்தான் உன்னை வரச் சொல்லி எழுதினேன்" என்றான்.

என் மன நிலை எப்படியிருக்கும் என்பதை நீங்களே ஊகித்துக் கொள்ளுங்கள்.

வெகு நேரம் யோசித்தேன்; கடைசியில் "உடன் புறப்படவும், ஜானகியைப் பார்த்தேன்" என்று ராகவனுக்கு ஒரு தந்தி கொடுத்தேன். விழுந்தடித்துக்கொண்டு வந்து சேர்ந்தார் ராகவன். ஆனால் பாழும் விதி சதி செய்து விட்டது. இருபது வருஷ காலமாக யாரை எதிர் நோக்கி ராகவன் நாட்களைக் கழித்தாரோ அவளை பிணமாகத்தான் காண முடிந்தது. அடடா, ஜானகியைக் கட்டிக் கொண்டு அவர் அழுத அழுகை இப்போது நினைத்தாலும் உடல் நடுங்குகிறது. மூன்று நாள் அவர் எழுந்திருக்கவேயில்லை மூர்த்தி தந்தையை சமாதானப் படுத்தினான். தந்தையும் அவனும் தென் வேலி கிராமத்தை நோக்கிப் புறப்பட்டார்கள்.

ராகவன் பட உலகை விட்டு ஏன் விலகினார் என்ற காரணம் இப்பொழுது உங்களுக்குப் புரிந்திருக்கலாம். வியப்பும் ஏற்படலாம். ஆனால் 'காண வேண்டும், காண வேண்டும்' என்று ஏங்கியவருக்கு காதலியைக் காணாமல் நேர்ந்து விட்ட, இந்த அதிர்ச்சியை அவர் எப்படித் தாங்கினார் என்பதுதான் என் வியப்பு

தந்தையும் மகனும் சந்தோஷமாக இருக்கிறார்கள் என்பதுடன் இச் சோகக் கதையை சுபமாக முடித்து விடுகிறேன்.

ரூ. 300 இனாம்

★

இந்த மகாகாளி இயந்திரத் தகட்டை நீங்கள் முழு மனதுடன் உங்கள் கைவசம் வைத்திருந்தால் நீங்கள் நினைத்தவை கைக்கூடும். உங்கள் விரோதிகள் எவ்விதமான நிலைமையிலிருந்தாலும் உங்களுக்குப் பணிவார்கள். நீங்கள் எதைக் குறித்துத் தேடுகிறீர்களா அது உங்களைத் தேடிவரும். இந்தத் தகட்டை கைவசம் வைத்துக் கொண்டு தியானம் பண்ணும்போது இந்த மகாகாளி தோன்றி நீங்கள் விரும்புவதை அடையும்படி செய்வாள். ஒரு யந்திரத் தகடு விலை ரூ. 1-4-0. ஒரே தடவையில் 3 ஆர்டர் செய்தால் ரூ. 3-2-0. உடனே பலன் தெரியக்கூடிய யந்திரத் தகடு ஒன்று தனி- சக்தி இல்லை யென்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 300 இனாம்.

THE BENGAL MESMERISM HOUSE (G.M.M) HOSHIARPUR.

சிந்திக்கவும்

சென்னை அரசாங்கம் சமீப காலமாக பல நூதன சட்டங்களை சினிமாத் தொழிலுக்கென்று கொண்டுவர முயற்சிக்கிறது. அப்படிப்பட்ட சட்டங்களுள் படங்களில் கடவுள்களைக் காட்டக் கூடாது என்பதும் ஒன்று. படங்களில் கடவுள்களின் பாகத்தைக் கேவலப் படுத்திக் காட்டுகிறார்கள் என்பதற்காகவே இச் சட்டம் என்றும் காரணம் கூறப்படுகிறது.

இதைப் பார்க்கும் போது நமக்கு ஆச்சரியமாகத்தான் இருக்கிறது. படங்களைத் தணிக்கை செய்ய தணிக்கை போர்டார் இருக்கிறார்கள். அவர்களிடம் படங்களை எவ்விதமாகச் செய்யவும் சட்டம் என்ற சக்தி இருக்கிறது. இவ்வளவு இருந்தும் ஆபாசமான காட்சிகள் வருகிறதென்றால் குற்றம் யாருடையது? ஏன் தணிக்கை போர்டார் இம்மாதிரியான ஆபாசப் படங்களைக் காட்ட அனுமதிக்கிறார்கள்?

சமீபத்தில் வெளியான ஒரு தமிழ்ப் புராணப் படத்தை சர்க்கார் பார்த்திருந்தால் இப்படிப்பட்ட சட்டத்தையே கொண்டு வர எண்ணியிருக்க மாட்டார்கள். புராணம் என்றால் என்னவோ என்று கனவு காண வேண்டாம். அவைகளில்தான் நல்ல கருத்துக்கள் உள்ள கதைப் போக்கு இருக்கிறது. நீதி போதனைகள் இருக்கின்றன. ஆதலால் சர்க்கார் புராணப் படங்களைத் தடை செய்யக் கூடாது. அதற்குப் பதில் எந்தப் படத்திலாவது கடவுள்களின் பாகத்தையோ, கடவுள்களைப் பற்றியோ கேவலமாகக் காட்டினால் அப்படத்தை அடியோடு தடை செய்வதுடன் அதன் படப் பிடிப்பாளர்களையும் இத்தொழிலிலிருந்து வெளியேற்றி விடலாம். இதை விடுத்து சர்க்கார் அனாவசியமாக, கடவுள்களைக் காட்டக் கூடாது, புராணப் படங்கள் கூடாது என்று தடை விதிக்குமானால் பிறகு இந் நாட்டில் நாஸ்திகம் தான் வளரும்.

எம். வி. சீனிவாசன்,
திருச்சிராப்பள்ளி.

அனைத்தையும் தடை செய்யுங்கள்

வெள்ளித் திரையில் தெய்வங்களை ஆபாசமாகச் சித்தரிப்பதைத் தடுக்க சர்க்கார் சட்டமியற்றுவது அவசியந்தானா?—இந்தக் கேள்வியைப் பற்றி சிந்தனை செய்து தங்களது அபிப்பிராயத்தை உருவாக்க நினைக்கிறவர்களைச் சமீபத்தில் வெளிவந்துள்ளதோர் சமூக சீர்திருத்தப் படத்தைப் பார்க்கும்படி தான் வற்புறுத்துகிறேன். அருமையான சமூகக் கருத்துக்கள் நிறைந்த இப்படத்தில் ஒரு விரஸமான காட்சியும் இணைக்கப்பட்டுள்ளது. இந்து மதத்தின் ஓர் தனி அம்சமாகிய 'விக்கிரஹ ஆராதனை' அந்தக் காட்சியில் கேலிக் கூத்தாக்கப்படுகிறது. அந்தக் காட்சியில் (வெறி பிடித்தவன் போல சித்தரிக்கப்படும்) ஒரு பாத்திரம் ஹிந்து தெய்வ விக்கிரஹம் ஒன்றின் முன் வைக்கப்பட்டிருக்கும் நைவேத்தியங்களைக் காலால் உதைத்துத் தள்ளும்போது, எந்த ஹிந்துவின் மனமும் குமுறாமலிருக்க முடியாது. இந்தக் காட்சி இப்படத்தில் தோன்றாவிட்டால், படத்தில் பிரசாரம் செய்யும் சமூகசீர்திருத்தக்கருத்துகளின் மதிப்பும் அவற்றின் விறு விறுப்பும் குறைந்துவிடுமா? அல்லது இது அனாவசியம் என்று தெரிந்தும் வேண்டுமென்றே நாஸ்திகப் பிரசாரம் செய்வதுதான் இப்படத்தின் நோக்கமா? நடுநிலைமையிலிருந்து, இம்மாதிரிப் படங்களைத் தணிக்கை போர்டார் உண்மையாகவே தணிக்கை செய்தனரா?

ஆகையால் சர்க்கார் கொண்டு வர இருக்கும் சட்டத்தில், கடவுள்களின் படங்களையும் விக்ரஹங்களையும் அவர்களை நிந்தித்தோ, தூஷித்தோ செய்யப்

படும் வசனங்களையும் படங்களில் காட்டக் கூடாது என்று சேர்த்துக் கொண்டு வந்தால் கூட நன்றாக இருக்கும். இல்லா விட்டால் பட முதலாளிகள் தணிக்கை போர்டாரையும் கடுக்காய் கொடுத்து விட்டு தங்கள் கொள்வகைகளைப் பிரசாரம் செய்ய வந்து விடுவார்கள்.

கீ. வ. ராஜகோபாலன்,
தஞ்சாவூர்.

இதிலுமா மார்கெட்

தியேட்டர்களில் விற்கப்படும் சினிமாப் பாட்டுப் புத்தக வியாபாரம் ஒரு புது மோஸ்தரில் நடந்து வருகிறது. புத்தகத்தில் கொட்டை கொட்டையான எழுத்துக்களில் அச்சிடப்பட்டிருக்கும் "இதன் விலை ஒன்றரையணா" என்பதை நன்றாகப் பார்த்துக் கொண்டே இரண்டணா கொடுக்கவேண்டியிருக்கிறது. புத்தகம் விற்பவரை அதட்டிக் கேட்டால் புத்தகம் வாங்க முடிவதில்லை. இந்த வழி தமிழ் நாட்டில் அநேகமாக எல்லா தியேட்டர்களிலும் கையாளப்படுவதை நேரில் கண்டிருக்கிறேன். இது சம்மந்தப்பட்ட வியாபாரிகள் ஒன்று தங்கள் போக்கை மாற்றிக்கொள்ள வேண்டும், அல்லது புத்தகத்தின் மேலாவது வாங்கப்படும் தொகையை தைரியமாக அச்சிட வேண்டும்.

ஜீ. சக்கரவர்த்தி,
தஞ்சாவூர்.

அக்கிரமம் !

இப்பொழுது நடைமுறையில் இருக்கும் சினிமாக் கொட்டகைகளில் பெண்களுக்காகத் தனியாக டிக்கெட் கொடுக்கும் இடம் இருக்கிறது. ஆனால் பெண்களுக்கு டிக்கெட் கொடுப்பது ஆண்கள் தான். இக் காரணத்தால் பெண்கள் டிக்கெட் வாங்கும் பொழுது டிக்கெட் கொடுப்பவர் முகத்தைப் பார்த்து கையை அமுக்கி டிக்கெட் கொடுக்கிறார். கொஞ்சம் கும்பலாய் இருக்கும் சமயத்தில் பணம் கொடுத்த பெண்ணின் கையைப் பிடித்துக் கொண்டு சிரித்துக் கொண்டே டிக்கெட் கொடுக்கிறார்கள். அன்றியும் சில தியேட்டர்களில் கேட்டில் நிற்கும்ஆண்கள் டிக்கெட்டை மெல்லமாகவே கிழித்துக் கொடுத்துக் கொண்டு, கும்பல் அதிகமான உடன் அவர்களைக் கையால் பிடித்துத் தள்ளி மோசமாக நடத்துகின்றனர்.

ஆகவே சினிமா தியேட்டர் முதலாளிகள் பெண்களுக்கு டிக்கெட் கொடுப்பதும், கேட்டில் நிற்பதும் பெண்களையே நியமித்தால் மேற்படி குறை நீங்கும்.

கே. டி. மாணிக்கம்,
சிதம்பரம்.

புது முறை தேவை

தற்காலத்தில் வெளியிடப்பட்ட திரைப் படங்களில், அப்படத்தில் நடிக்கும் கதா பாத்திரங்களின் பெயர்களை வெகு விரைவில் மக்கள் புரிந்து கொள்ள முடியாதபடி காட்டுகின்றனர். இவ்வாறு காட்டுவதனால் அப்படத்தில் நடிக்கும் கதா பாத்திரங்கள் இன்னார்தான் என்று புரிந்து கொள்ள முடியாமல் மக்களிடையே கதா பாத்திரங்களின் பெயர்களில் பல சந்தேகங்களும் பிரச்னைகளும் உண்டாகின்றன. உதாரணமாக, திருவாங்கூர் நாட்டிய சகோதரிகளான லலிதா—பத்மினியை எடுத்துக் கொள்வோம். இவர்கள் பல தமிழ்ப் படங்களில் நடனமாடி மக்களை மகிழ்ச்சியடையச் செய்கின்றனர். இவர்களுடைய ஆட்டத்தைக் கண்டு மக்கள் ஆனந்திக்கின்றனரே யொழிய,இவர்களில் லலிதா யார் பத்மினி யார் என்பதை அறிந்து கொள்ள முடியவில்லை. ஆதலால் மக்களிடையே கதா பாத்திரங்களின் பெயர்கள் ஸ்திரமாகவும் படக்கலை மேன்மையடையவும், படத் தயாரிப்பாளர்கள் மேனாட்டு முறைப்படி படங்களில் வரும் நடிக நடிகைகளின் பெயர்களை நிறுத்திக் காட்ட வேண்டும். இல்லையேல் கதாபாத்திரங்களின் பெயர்களை திரையில் காட்டாமல், அப்படத்தில் நடிக்கும் முக்கிய கதாபாத்திரங்களின் முகத் தோற்றங்களை மட்டும் அவர்களுடைய பெயர்களுடன் வெண் திரையில் காட்டலாம். அத்துடன் படத் தயாரிப்புக்கு ஜீவநாடி போன்ற டைரெக்டர், திரைக் கதை ஆசிரியர், வசன கர்த்தா, பாட்டு இயற்றியவர் முதலியவர்களையும் படத்தில் அவசியம் காட்ட வேண்டும். இம்முறைப்படி செய்வார்களேயானால் மக்கள் கதாபாத்திரங்களின் பெயர்களை நன்கு தெரிந்து கொள்வர்.

என். சாமினாதன்,
கண்டனூர்.

இழிச் சொல் ஒழியுமா ?

சினிமா பார்ப்பவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது. படப் பிடிப்பிலும் பாட்டுகளிலும் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் சினிமாவைப் பார்த்துக் கெட்டுப் போகிறார்கள் என்று பலர்

சொல்லும் வழக்கம் இன்னும் போகவில்லை. அதற்குப் பதில் அம்மாதிரி சொல்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

இதற்குக் காரணம் படத் தயாரிப்பாளர்கள் தாம். படங்களில் அவர்கள் ஸெக்ஸ் அப்பீல் என்று நடிகைகளுக்கு சரியாக மேலாடை உடுத்தாமலும், அங்கங்களைக் கவர்ச்சிகரமாகச் செய்தும் காண்பிக்கின்றனர். அத்துடன் சில சமயம் கீழ்த்தரமான வசனங்களையும் உபயோகிக்கின்றனர். இதன் காரணமாக சில பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளைச் சினிமா பார்க்கவே போகக் கூடாது, அதனால் அவன் கெட்டுவிடுவான் என்றும் கூறுகின்றனர்.

நாட்டிற்கு நல்லது செய்ய வேண்டிய கலை இம்மாதிரி இழிச்சொல்லுக்கு ஆளாகலாமா? கலைக்குத்தான் இழிச்சொல் என்று எண்ணவேண்டாம். அதனால் அதைத் தயாரிப்பவர்களுக்கும், சம்பந்தப்பட்ட அனைவருக்குமே, இழிச்சொல்தான். இதைப் போக்க உடனே படத் தயாரிப்பாளர்கள் முற்பட வேண்டும். மக்கள் மனதில் கெட்ட உணர்ச்சியைத் தூண்டும் வகையில் படத்தைத் தயாரிக்கக் கூடாது. மக்கள் அறிவைப் பெறுக்கி, அவர்கள் செல்லும் கெட்ட பாதையிலிருந்து திருப்பும் வகையில் படங்களைத் தயார் செய்ய வேண்டும். இதைச் சம்பந்தப்பட்டவர்கள் செய்வார்கள் என்று நம்புகிறேன்.

எஸ். ஜி. ரத்னம்,
சத்தியமங்கலம்.

'பரிசு பெற்ற கடிதம்

★

எழுதியவர் :
எம். வி. சீனிவாசன்,
149 தஞ்சை ரோடு,
திருச்சிராப்பள்ளி.

நிர்வாகிகளின் கடமை

இரண்டு மாட்டில் ஒன்று மட்டும் துரிதமாக சென்றும், மற்றது விழுந்தும் கிடந்தால் வண்டி ஒடாது] நிற்பது மட்டுமல்ல; வண்டிக்கே ஆபத்துகூட ஏற்பட்டுவிடும்.

இதுபோலவேதான் படம் ஒரு தியேட்டரில் நல்ல ரீதியில் நடக்கவேண்டுமானால் பொதுமக்களின் கடமையுடன் நிர்வாகிகளின் கடமையும் தேவைப்படுகிறது.

எல்லாத் தியேட்டர்களிலும் திரையில் படம் காண்பிக்கப்படுமுன் 'தயவுசெய்து சப்தம் போடாதீர்கள்' என்ற உத்தரவு பிறப்பிக்கப்படும். பொதுமக்களோ படம் பார்க்க வேண்டுமென்ற அவாவில் சத்தம் போடாது இருப்பார்கள். ஆனால் சில தியேட்டர்களில் எங்கிருந்தோ ஒரு படை கிளம்பி 'பீடி சிகரெட் சோடா கலர்' என்று படம் நடந்து கொண்டிருக்கும் போதே கூச்சல் போடுகிறது.

இந்தத் துர்ப்பழக்கம் அறவே ஒழிக்கப்பட வேண்டும். 'இடைவேளை' இருக்கிறதே இரைச்சல் போட்டு விற்பதற்கு? படம் நடக்கும் பொழுது இந்தக்கூச்சல் போடுவது பார்ப்பவர்களுக்கு செய்யும் இடைஞ்சலேயாகும்.

இதைத் தடுக்கும் பொறுப்பு தியேட்டர் நிர்வாகிகளைப் பொருத்ததே. படம் நடக்கும்போது விற்கும் விற்பனை படம் முடிந்த பின்னும் இடைவேளையின் போதும் விற்கத்தான் செய்யும். இதனால் நஷ்டம் ஏற்படவே செய்யாது.

ஆகவே தியேட்டர் நிர்வாகிகள் படம் ஆரம்பித்தவுடன் சில்லறை வியாபாரம் செய்யும் பையன்களை தியேட்டருக்குள் விடாது, இடைவேளை அல்லது படம் காட்டாதிருக்கும் சமயங்களில் மட்டும் விற்பதற்கு அனுமதி அளித்தால் நலமாயிருக்கும்.

அட்சயன்,
மதுரை.

கைமேல் பலன்

ஜனவரி மாத இதழில் 'ஒரே ஒரு தியேட்டர் வேண்டும்' என்ற தலைப்பின் கீழ் நான் எழுதிய கடிதத்திற்குப் பலன் கிடைத்து விட்டது. அக்கடிதத்தில் பம்பாய் நகரில் புதிய தமிழ்ப் படங்களையும் காட்ட ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் எழுதியிருந்தேன்.

சென்ற மாதம் பம்பாய் நகரில் "சக்ரதாரி, ராஜமுக்தி" ஆகிய இரு படங்களும் காட்டப்பட்டன. இப்பொழுது புதுப் படங்களை தருவிப்பதிலும், அருகாமையில் உள்ள தியேட்டர்களில் திரையிடவும் ஒருவர் சிரத்தை எடுத்துக் கொண்டிருக்கிறாராம். சிரத்தை எடுத்துக்

கொண்ட நண்பருக்கும், புதுப் படங்களைப் பம்பாய்த் தமிழர்கள் கண்டுகளிக்க அவைகளை அனுப்பியவர்களுக்கும் நன்றி. இதே போல் மேலும் புதிய படங்களை அனுப்புவார்கள், முயற்சி எடுத்துக் கொண்டவர் இதில் வெற்றி காண்பார்—என்று நம்புகிறேன்.

ஈ. ராஜாமணி,
பம்பாய்.

ஏன் இந்தப் பழக்கம்?

" நடிகர்களில் பலதரப்பட்டவர்கள் இருக்கின்றனர். சிலர் ரஸிகர்களிடத்தில் நன்கு பேசிப் பழகுகின்றனர். சிலர் ரஸிகர்களைக் கண்டாலே மறைகின்றனர். இது எதனால் என்பது தெரியவில்லை. ஆனால் இவர்கள் செய்வது தமக்கு எவ்வளவு பாதகமானது என்பதை உணர்வதே இல்லை.

" நடிகர் பலரிடம் கலந்து பழகினால் தான் பலருண்டைய நடை பேச்சு முதலியவைகளை நன்கு தெரிந்து கொள்ள முடியும். அப்படித் தெரிந்து கொள்வதால் அவர்களால் ஒவ்வொரு படத்திலும் ஒவ்வொரு விதமாக நடிக்கவும், பாத்திரத்தின் தன்மைக் கேற்ப பேசவும் முடியும். அதனால் அவர்களுடைய நடிப்பு சோபிதமடைவதுடன் அவர்கள் மேலும் புகழ் பெறவும் உதவியாக இருக்கும்.

' ரஸிகர்களைக் கண்டு பதுங்கும் நடிகர்கள், ரஸிகர்கள்தாம் தங்கள் வாழ்விற்கும், தாழ்விற்கும் காரணஸ்தர்கள் என்று உணர வேண்டும்.

ஆ. மகிமைதாசன்,
சென்னை—7.

தாறுமாறு!

இங்குள்ள தமிழர்களுக்கு, தமிழ் நாட்டில் வெளியான ஒரு புதுப் படம் குறைந்தது ஆறு மாதங்கள் கழித்து ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமைகளிலும், பொது விடுமுறை நாட்களிலும் ஒரே ஒரு காட்சி மட்டும் காலையில் நடைபெறும். சில சமயம், நல்ல படமாயிருந்தால் ஒன்றிரண்டு தியேட்டர்களில் அரை மணி நேர வித்தியாசத்தில் ஒவ்வொரு தியேட்டரிலும் ஒரு காட்சி வீதம் காண்பிக்கப்படும். ஆவலுடன் காண வந்திருக்கும் தமிழ் மக்கள் சில சமயங்களில் கோபத்துடன் வெளிவர வேண்டியிருக்கும். காரணம், படம் மங்கலாகவும், பாட்டுகளும் வசனங்களும் அலங்கோலமாக வெட்டப்பட்டும், 'ரீல்'கள் மாற்றியும் காண்பிக்கப் பட்டிருக்கும். இவற்றிற்குப் பொறுப்பாளி உரிமையாளர்கள் தாம். அவர்கள் 'ரீல்'களை மாற்றியும், பழைய 'காப்பி'களையும் அனுப்பி விடுவதால் இவ்விதக் கஷ்டங்கள் நேரிடுகின்றன. இதே சமயம், பத்துப் பனிரெண்டு வருஷங்களுக்கு முன் வெளி வந்த ஆங்கிலப் படங்கள் இன்றும் புதியன போல் காணப்படுகின்றன. ஆகையால் இனி மேலாவது பட விநியோகஸ்தர்களோ அல்லது பட உரிமையாளர்களோ பணத்தையே பெரிதாகக் கருதாமல் நல்ல 'காப்பி'யை ஒழுங்கான முறையில் ('ரீல்' கள் மாருமல்) அனுப்பி வைப்பார்களென நம்புகிறேன்.

பெ. ஆறுமுகம்,
பம்பாய்.

ஆண் நடிகர்களின் ஆடை ஆபரணங்கள்!

அபூர்வமாகத் தயாரிக்கப்படும் சரித்திரப் படங்களிலும் அடிக்கடி தயாரிக்கப்படும் புராணப் படங்களிலும், ஆண் நடிகர்களுக்கு அளிக்கப்படும் ஆடை ஆபரணங்கள் அவர்களது திரைத்தோற்றத்தை வெகுவாகப் பாதிக்கின்றன. ஜன்னல் திரைகளுக்கோ, மற்ற ஸ்கிரீன்களுக்கோ கூட நாம் பொறுக்க விரும்பாத பூப்போட்ட சிட்டித் துணிகளில், தலையணைக்கு உறை போடுவது போல் நீண்ட உடையாகத் தைத்து மாட்டி விடுகிருர்கள். இந்த லக்ஷணம் போதாதென்று முத்து மாலைகளை ஒரு சுமை கழுத்தைச் சுற்றி தொங்க விடுகிருர்கள். அந்த ராஜாவோ, கதாநாயகனே, மந்திரி குமாரனே அர்த்தராத்திரியில் படுக்கையிலிருந்து விழித்துக் கொள்ளும்போதும் அந்த ஆடை ஆபரணங்களோடு தென்படுகிருன். ஆண்டவன் சன்னிதியில் அஞ்சலி செய்து நிற்கும்போதும் அதே வேஷத்தில் காக்ஷியளிக்கிருன். புராண இதிகாச கதாநாயகர்களும் மற்ற புருஷ பாத்திரங்களும் இப்படித்தான் உடை யணிந்திருந்தார்கள் என்று எந்த சினிமா பிரபஞ்ச மகானுபாவன்தான் கற்பனை செய்தானே? ஆனால் புராண கால கதாநாயகிகளுக்கு மாத்திரம் இருபதாம் நூற்றுண்டு பாஷனில் பாடியும், ஜம்பரும், காது லோலாக்குகளும் அணிவிக்க தயங்குவதில்லை.

ஆகையால் சினிமாப் பிரபஞ்ச பிரம்மாக்கள் கொஞ்சம் ஆண் நடிகர்களின் ஆடை விஷயத்திலும் சிரத்தை காண்பித்தால், அவர்களுக்கு சினிமா ரசிகர்கள் மிகவும் கடமைப்பட்டவர்களாக இருப்பார்கள்.

ஆர். எஸ். ஸ்வாமிநாதன்,
திருநெல்வேலி.

பானுமதி

ஆர்கேஸ் பிக்சர்ஸாரின் தேவமனோகரி தமிழ்ப்படத்தில் பானுமதிக்கு நிறைய ஆடவும், பாடவும், நடிக்கவும் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டிருக்கிறது.

மஹாலிங்கம் சரஸ்வதி

"இன்பவல்லி"யில் இரு காட்சிகள்

சரோஜா மஹாலிங்கம்

டி. பாலஸுப்ரமணியம்

[16-ம் பக்கத் தொடர்ச்சி]

வந்த போது அங்கு தன் தாயாரும், பாட்டியும் தனக்காகக் காத்திருந்ததைப் பார்த்த பாலு திடுக்கிட்டுப் போனார். அந்தப் பையனிடம் தன் முழு விருத்தாந்தங்களையும், விலாஸத்தையும் தெரிவித்த போது அவன் இப்படி தன் பாட்டியையும் தாயாரையும் வந்து சேரும்படி கடிதம் எழுதிப் போட்டு விடுவான் என்று பாலு சந்தேகிக்கவேயில்லை.

கையும் மெய்யுமாய் அகப்பட்டுக் கொண்ட பாலு வேறு வழியில்லாமல் சென்னைக்குத் திரும்ப வேண்டியதாயிற்று. சென்னையை அடைந்த பின் அவரது மனம் பழைய பூசாரித் தொழிலையோ, ஆபீஸ் பையன் வேலையையோ விரும்பவில்லை. அவருடைய பெற்றோரும் இதற்காக பாலுவை வற்புறுத்தவில்லை.

இந்த சமயத்தில் சென்னை ஒற்றைவாடை தியேட்டரில் ஜகன்னாதய்யரின் பால மீன ரஞ்சனி சங்கீத சபையார் நாடகங்களை நடத்தி வந்தனர். பாலு தம் நண்பன் ஒருவனது அழைப்பின் பேரில் இந்த நாடகங்களில் ஒன்றைப் பார்க்கச் சென்றார். நாடகத்தைப் பார்த்தது முதல் தாமும் எப்படியாவது அந்தக் கம்பெனியில் சேர்ந்து நடிக்க வேண்டும் என்ற மாற்ற முடியாத ஆசை பாலுவின் மனதில் ஏற்பட்டது. குடும்பம் மகா தரித்திர நிலையில் இருந்ததாலும், பாலு வேலையில்லாமல் காலத்தைப் போக்கிக் கொண்டிருப்பதை விட நாடகத்திலாவது சேர்ந்து நடிக்கட்டும் என்ற எண்ணத்தாலும் பெற்றோர்கள் அவரது விருப்பத்தை அங்கீகரித்தனர். அவரது தாயாரே பாலுவை ஜகன்னாதய்யரிடம் அழைத்துச் சென்று ஐந்து ரூபாய் மாதச் சம்பளத்தில் அமர்த்தி விட்டு வந்தார்.

அந்தக் கம்பெனியில் அப்போது காமெடியன் சாரங்கபாணி, பி. டி. சம்பந்தம், முதலியவர்கள் நடித்து வந்தனர். இக் கம்பெனி அநேக

நாடக நடிகர் பாலஸுப்ரமணியம்.

ஊர்களில் நாடகமாடிவிட்டு பாலக்காட்டை அடைந்தது. இதற்குள் ஐந்து வருஷ காலமும் கடந்து விட்டது. அந்த சமயம் முதலாளிக்கும் நடிகர்களுக்கும் இடையே பெருந் தகராறு ஏற்பட்டது. அதன் விளைவாக சுமார் 25 நடிகர்கள் கம்பெனியை விட்டு விலகினர். அப்படி விலகியவர்களில் ஒருவர் பால சுப்ரமண்யம்.

மேற்படிக் கம்பெனியை விட்டு விலகிய பின் பாலு வி. எஸ். சுந்தரேசய்யரின் கம்பெனியிலும், பிறகு ராவண ஆர். கோவிந்தசாமி கம்பெனியிலும், அதன் பிறகு திருப்புகழ் குப்புசாமி முதலியார்—முருகேச நாயக்கர் ஆகியோரது கம்பெனியிலும் கொஞ்சகாலம் நடித்து வந்தார்.

வேலையினின்றும் விடுதலை பெற்ற பாலு சென்னைக்குத் திரும்பினார். வேலை பிரச்னை மீண்டும் கிளம்பியது. நாடகக் கம்பெனியில் சேர்ந்ததன் பலனாக அவர் கொஞ்சம் சங்கீதத்தை கேள்வி முறையாய் கற்றுக் கொண்டிருந்தார். அதை வைத்துக் கொண்டு அவரால் சும்மா இருக்க முடியவில்லை. அவரும், அவரது நண்பர்கள் சிலருமாய் சேர்ந்து ராயபுரத்தில் ஒரு தேசிய கீத பஜனை சபாவை ஆரம்பித்தனர். அந்த சபா அடிக்கடி தேசிய சங்கீதக் கச்சேரிகளை நடத்தி வந்தது. அவைகளில் பெரும்பாலானவை பாலுவின் கச்சேரிகளாக இருக்கும். ஏனென்றால் அவரது தேசிய கச்சேரிகளை, அந்தப் பேட்டை வாசிகள் மிகவும் விரும்பிக் கேட்டுவந்தனர். இந்த சபாவிற்கு அவர்கள் காட்டி வந்த பேராதரவின் விளைவாக அது கொஞ்ச காலத்திற்குப் பிறகு வெறும் சங்கீத சபாவாக இருந்ததை விட்டு ராயபுரம் காங்கிரஸ் சபையாக மாறி விட்டது குறிப்பிடத் தக்கது.

பாலு பால்யம் முதலே ஆழ்ந்த தேசபக்தி உடையவர். பாரதியாரின் பாடல்களையும், இதர தேசியப் பாடல்களையும் அவர் தெருத் தெருவாய் சென்று பஜனை செய்வது வழக்கம். ஒரு நாள் பாலுவின் பஜனைக்கு ஏற்பாடாகி இருந்தது. ஆனால் ஹார்மோனியக்காரர் வரவில்லை. அருகிலிருந்த ஒரு வங்காளி ஹார்மோனியம் வாசிக்க முன் வந்தார். பாலு பாட, அதற்குச் சம்பந்தமில்லாமல் அந்த வங்காளி வாசிக்க, ஜனங்கள் ஏமாற்றம் அடைய, இப்படியாக அந்த பஜனை கோஷ்டி பூக்கடை போலீஸ் ஸ்டேஷனை அடைந்தது.

பாலுவுக்கு வருத்தம் தாங்க முடியவில்லை. தம் பெயரை காப்பாற்றிக் கொள்ளுவதற்காக தம் கடைசி ஆயுதங்களையும் உபயோகித்து விடுவது என்று தீர்மானித்தார். தம 'மாஸ்டர் பீஸா'ன "பஞ்சாப் படுகொலை" என்ற பிரபல பாட்டை ஆரம்பித்தார். அந்தப் பாட்டு சில நிமிஷங்களில் ஏராளமான கூட்டத்தைக் கூட்டி விட்டது. பாலு உத்ஸாகம் அடைந்து, "நீலன் சிலை"ப் பாட்டையும் பாடினார்.

பஜனை மெதுவாக ஆதியப்ப நாயக்கன் தெருவை அடைந்தது. கூட்டம்

வரவர அதிகரித்து, தாங்க முடியாத நிலைமையையும் அடைந்து விட்டது. பாலு பாடுகிறார் என்பதையும், ஏராளமாகக் கூட்டம் சேர்ந்திருப்பதையும் அறிந்த அவரது நண்பர் (மில் போஸ்டிங் கம்பெனி ஜெயராமன்) மாடி மீதிருந்து ஒரு மேஜையைக் கட்டித் தொங்க விட்டு இறக்கி, அதன்மீது பாலுவை அமர்ந்து கச்சேரி செய்யச் செய்தார்.

பாலு தம் மூன்றாவது 'அவசர ஆயுத'த்தையும் பிரயோகித்தார். அந்த "ஈஸ்ட் இந்தியா கம்பெனி" பாட்டைக் கேட்ட ஜனங்கள், ஒவ்வொரு அடி முடிந்ததும் கரகோஷம் செய்தனர். 'இந்தச் சம்பவத்தை நான் என்றும் மறக்க முடியாது" என்று பாலு ஆனந்தக்கண்ணீர் ததும்ப என்னிடம் கூறினார்.

பாலசுப்ரமண்யத்திற்கு இது போல தேசியக் கச்சேரிகளைத் தொடர்ந்து செய்து வர இஷ்டந்தான். ஆனால் அவருடைய குடும்பக் கஷ்டங்கள் அவரை மீண்டும் நாடக மேடைக்கு உந்திச் சென்றது. ராணிப்பேட்டையில் நாடகமாடி வந்த டி. பி. பொன்னுசாமிப் பிள்ளை கம்பெனியில் பாலு ஒரு நடிகராய்ச் சேர்ந்தார். இரண்டு வருஷங்கள் அக்கம்பெனியில் கழிந்தன. அதன் பிறகு அந்தக் கம்பெனியின் முதலாளி மாறி, ராஜாம்பாள் கம்பெனி என்று பெயரும் மாறியது. சொற்ப காலத்திற்குப் பிறகு அக் கம்பெனி பக்கிரி ராஜா கம்பெனியாக மாறிற்று. ஆனால் கொஞ்ச கால வாழ்விற்குப் பிறகு அக்கம்பெனி கலைக்கப்பட்டு விட்டது. இதன் விளைவாக வேலையற்றுப் போன நடிகர்களை வைத்துக் கொண்டு டி. பி. பொன்னுசாமிப் பிள்ளை ஒரு புதுக் கம்பெனியை ஆரம்பித்தார்.

ராணிப்பேட்டையில் பொன்னுசாமிப் பிள்ளையின் கம்பெனியில் சேர்ந்த போது அவருக்கு முக்கிய பாத்திரங்கள் கொடுக்கப் படலாயின. பாலுவின் நடிப்புத் திறமையைப் பொதுமக்கள் வெகுவாகப் பாராட்ட ஆரம்பித்தனர். அப்பொழுது நடந்த ஒரு சம்பவம் இங்கு குறிப்பிடத்தக்கது.

ஒருநாள் ராமர் பட்டாபிஷேக நாடகத்தை மேற்படி கம்பெனியார் நடத்தி வந்தனர். பாலு தசரதர் வேஷந் தரித்து மேடையில் நடித்துக் கொண்டிருந்தார். ராமனைக் காட்டுக்கு அனுப்ப மட்டும் வேண்டாம் என்று கைகேயியிடம் கெஞ்சுகிறார் தசரதர். இந்தச் சமயத்தில் ஒரு திடுக்கிடச் செய்யும் செய்தி அவருக்கு ரகசியமாகத் தெரிவிக்கப் பட்டது. அதாவது நோய் வாய்ப் பட்டிருந்த அவரது மூத்த புதல்வன் காலமாகி விட்டான் என்ற செய்தியே அது. இச்செய்தியைக் கேட்ட அவருக்கு உண்மையிலேயே புத்திர சோகம் ஏற்பட்டு விட்

அபிமன்யு

“வேலைக்காரி”யில்

டது. அதன் பின் அவர் வழக்கமாகப் பேசவேண்டிய சம்பாஷணைகள் எல்லாம் மறந்து விட்டது; தம் மனதிற்குத் தோன்றியதை யெல்லாம், வாய்க்கு வந்ததை யெல்லாம் பேசினார். சபையோர்கள் நீண்ட நேரம் கரகோஷம் செய்து ஆர்ப்பரித்தனர். அன்று பாலுவின் நடிப்பு பிரமாதம் என்று ஏகோபித்த அபிப்பிராயம் கிளம்பியது!

பாலு சேர்ந்த பின் பொன்னுசாமி பிள்ளையின் புதுக் கம்பெனி பல ஊர்களில் நாடகமாடி விட்டுப் பொன்னமராவதியை அடைந்தது. அங்கு வந்து நாடகம் பார்த்த மானகிரி ஸ்ரீ. லக்ஷ்மணஞ் செட்டியாரை அந்த நாடகம் கவர்ந்தது. அதன் விளைவாக அக்கம்பெனியைத் தாம் ‘காண்ட்ராக்ட்’ எடுத்துக் கொள்ளுவதாகவும், காரைக்குடிக்கு வந்து நாடகம் ஆடவேண்டும் என்றும் “லேனா” தெரிவித்தார். இந்த ஏற்பாட்டிற்கு பொன்னுசாமிப் பிள்ளை இணங்கினார்; கம்பெனி காரைக்குடிக்குச் சென்று நாடகங்களைத் தொடங்கியது.

அப்பொழுது “லேனா” செட்டியார் சென்னையில் கிருஷ்ணன் தூது என்ற தமிழ்ப் படத்தைத் தயாரிப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தார். தாம் மேற்படி நாடகங்களை தற்காலிகமாக நிறுத்தி விட்டு, அக்கம்பெனி நடிகர்களில் சிலரை தம் படத்தில் நடிப்பதற்கு எடுத்துக் கொள்ள விரும்புவதாகத் தெரிவித்தார் செட்டியார். இதற்குச் சிலரே சம்மதித்தனர். அப்படிச் சம்மதித்தவர்களில் ஒருவரே டி. பாலசுப்ரமண்யமும். கிருஷ்ணன் தூது படத்திற்காக அவர் மொத்தம் ரூ. 750க்கு ஒப்பந்தம் செய்து கொள்ளப் பட்டார். அவருக்கு அப்படத்தில் பலராமன் வேஷம் அளிக்கப் பட்டிருக்கிறது.

இப்படத்தைத் தொடர்ந்து பாலு பூலோக ரம்பையில் நாகாசுரன் வேஷத்தை நடித்தார். இரு படத்திலும் அவரது நடிப்பு பரவாயில்லை என்று சொல்லக்கூடியதா யிருந்தது. ஆனால் அதன் பின்னர் அவர் நடித்த கங்காவதாரம், கதம்பம் ஆகிய இரு படங்களே வெற்றி பெற வில்லை யென்றால் அவரது நடிப்பைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை.

“டி. பாலசுப்ரமண்யம் ஒரு திறமையுள்ள நடிகர்” என்ற எண்ணத்தை முதன் முதலில் ரஸிகர்களின் மனதில் ஏற்படுத்தி வைத்தது கண்ணகி படம் தான்.

கண்ணகி ஊர்ஜிதம் செய்து வைத்த அவரது நடிப்புத் திறமை பிரபாவதியில் உச்ச நிலையை அடைந்து விட்டது. வஜ்ரநாப அரசனைத் தோன்றி அவர் மிகுந்த அட்டகாசத்துடன் நடித்திருக்கிறார். அந்தப் படத்தில் நடிப்பில் முதல் ஸ்தானத்தை பாலுவுக்கே அளித்தாக வேண்டும்.

கண்ணகியில் பாண்டியனாகத் தோன்றிய பாலு சிவகவியில் சோழ மன்னனாய் நடித்தார். அதன்

பின் அவர் குபேர குசேலாவில் குபேரனாக நடித்தார். அந்த வேஷத்தின் ராசியோ என்னவோ, அது முதல் பாலுவுக்கு இடைவிடாமல் நடிப்பதற்குப் படங்களும், நிறைய தனமும் கிடைக்க ஆரம்பித்தது. ஜெகதலப் பிரதாபனில் இந்திரனாகவும், மஹா மாயாவில் அரசனாகவும், பூம்பாவையில் மைலை அரசனாகவும் தோன்றியிருப்பவர் பாலுதான்.

ஒரு சமூகப் படத்தில் குறிப்பிடத்தக்க வேஷம் அவருக்குக் கிடைத்தது என் மகன் படத்தில் தானாகும். பிறகு உதயணனில் அரசனாகவும், வால்மீகியில் வேடுவ அரசனாகவும் தோன்றி நடித்தார். பின்னர் அவர் வித்யாபதி, பைத்தியக்காரன் ஆகிய இரு சமூகப் படங்களிலும் நடித்தார். கன்னிகாவும், அபிமன்யுவும் இவற்றைத் தொடர்ந்தன.

சென்ற வருஷம் பிரபலமடைந்த ஸிட்டேல் ஞானசௌந்தரியில் பாலு தர்ம ராஜாவாக நடித்திருக்கிறார். கிருஷ்ண பக்தியிலும் அவருக்கு ராஜா வேஷம் கிடைத்திருக்கிறது. சமீபத்தில் வெளிவந்துள்ள வேலைக்காரியில் அவர் ஜமீன்தார் வேதாசல முதலியாராய்த் தோன்றி அதிதிறமையாய் நடித்திருக்கிறார். தற்போது பாலு ரத்னகுமார் படத்தில் நடித்து வருகிறார்.

பாலசுப்ரமண்யம் நடித்துள்ள பல ரக வேஷங்களையும் ஆராய்ந்து பார்த்தால் அவர் உண்மையில் திறமை பொருந்திய நடிகர் என்று தைரியமாய் முடிவு கூறலாம். அவருக்கு அழகிய முகத் தோற்றமும், உடல்மைப்பும் இருப்பதோடு, அநேகமாக அவருக்குக் கிடைத்துள்ள வேஷங்களும் சரிவரப் பொருந்தி உள்ளன. வசனங்களை அவர் மிகவும் ஸ்பஷ்டமாய் பேசுவது ஒரு விசேஷ அம்சமாகும். பாலுவுக்குச் சுமாராகப் பாடத் தெரியும் என்றாலும் படங்களில் அவர் பாடவில்லை என்றே சொல்லி விடலாம். குபேர குசேலா, கதம்பம் ஆகிய இரு படங்களில் மட்டும் அவர் கொஞ்சம் 'ஸாம்பிள்' காட்டியிருக்கிறார்.

தற்போது நாற்பத்தி மூன்று வயது நிரம்பியவரான பால சுப்ரமண்யத்திற்கு அவரது முப்பதாவது வயதில் திருமணம் நடந்தேறியது. அவருக்குப் பிறந்த இரண்டு பிள்ளைகளில் மூத்த புதல்வன் இறந்து விட்டான். பால சுப்ரமண்யத்தைப் போலவே, அவரது புத்திரன் பசுபதியும் தகப்பனாருக்கு ஏக புதல்வனாய் இப்பொழுது விளங்கி வருகிறான்.

சுமார் மூன்று வருஷங்களுக்கு முன் பாலசுப்ரமண்யத்தின் அருமை மனைவி இறந்து விட்டார். அதன் பின் இப்பொழுது எஸ். சரஸ்வதி அவரது வாழ்க்கைத் துணைவியாக இருந்து வருகிறார். சரஸ்வதியும் ஒரு சினிமா நடிகை ஆவார். அவர் மஹா மாயா, குபேர குசேலா, பைத்தியக்காரன் ஆகிய படங்களில் பாலுவுடன் நடித்திருக்கிறார்.

சிவந்த மேனியும், சுமார் ஐந்தரை அடி உயரமும் உடைய அவரிடம் அமரிக்கையான நடவடிக்கைகளைக் காணலாம். அவரது அறைக்குள் நுழைந்தீர்களானால், பிரத்யேகமான கண்ணாடிப்பெட்டிக்குள் விளக்கு அலங்காரங்களுடன் அழகாக காட்சி அளிக்கும் சாந்த மூர்த்தி காந்தி மஹானின் உருவப் பொம்மையே முதலில் உம் கவனத்தைக் கவரும்.

"ரத்ன குமாரி"ல் டி. பாலசுப்ரமணியம்

துணிப்புல்

சமீபகாலமாக நாட்டிலே நாஸ்திகப் பிரசாரம் பலமாக நடந்து வருகிறது. இருந்தாலும் மக்களுக்கு கடவுள் பக்தியும் புராணங்களின் மீதுள்ள நம்பிக்கையும் தளராமல் தான் இருந்து வருகிறது. சமூகப் படங்களேயும், சமூக நாடகங்களையும் விட புராணப் படங்களுக்கும், புராண நாடகங்களுக்கும் இன்றும் மக்கள் அதிக ஆதரவு காட்டி வருவதே அதற்குப் போதிய சான்ருகும்.

• • •

சமீபகாலம் வரை இந்த கிரஹணம் நம் படங்களிலும், நாடகங்களிலும் படராமலிருந்து வந்தது. ஆனால் கொஞ்ச காலமாக இந்த விஷ(ம)ப் பிரசாரம் நம் படங்களில், பட்டதும் படாததுமாய் தலைகாட்ட ஆரம்பித்திருப்பது வருந்தத்தக்க விஷயம்தான்.

• • •

நாஸ்திகத்தைக் கடைப் பிடிக்கும்—சமயம் கிடைக்கும்போது அதைப் பிரசாரம் செய்ய விரும்பும்—சிலர் சினிமாத் துறையில் இருக்கிருர்கள் என்பது நிச்சியமாய் தெரிகிறது.

• • •

''சினிமாப் படங்களில் கடவுள்களைக் காட்டக் கூடாது'' என்று ஒரு சட்டம் வரப் போவதாக ஒரு வதந்தி உலாவியது. அந்த வதந்தி நாஸ்திகப் பிரசாரர்களுக்கு ஆனந்தமாக இருந்திருக்கும். ஆனல் நல்ல காலமாய் அது வதந்தியாகவே இருந்து மறைந்தது நமக்கு மகிழ்ச்சி!

• • •

தம்மை, 'முருகனது தாஸன்' என்று பிறர் அழைக்க வேண்டுமென நினைக்கும் ஒருவர் மேற் குறிப்பிட்ட கும்பலைச் சேர்ந்தவரோ என்று யார் தான் சந்தேகப்பட முடியும்? முடியாதுதான்.

இருந்தாலும், சினிமாக் கலைமீது கொண்ட மோகத்தால், ''கோயில்களையெல்லாம் தியேட்டர்களாக மாற்றி அமைத்தல் வேண்டும்'' என்று டைரெக்டர் முருகதாஸா யோசனை கூறும் போது யாருக்குத்தான் அவரது ஆஸ்திகத்தின்மீது சம்சயம் ஏற்படாது?

• • •

மனிதனுக்கு ஒரு கொள்கை உண்டென்ருல் அதை வாழ்க்கையில் அவன் எப்பொழுதும் மாருது கடைப்பிடித்தல் அவசியம். 'கடவுள் இல்லை. புராணங்களைக் கொளுத்து' என்ற பிரசார கோஷ்டியில் சேர்ந்த ''பாரதி தாஸன்'' புராணப் படங்களுக்கு கதை, வசனம் எழுத முன் வருவதை நினைத்தால் அவருடைய கொள்கையைப் பற்றி நமக்கு சிரிப்புத்தான் வருகிறது.

• • •

சிலருக்கு இந்த நாஸ்திகக் கொள்கையின்மீது அபாரமான பக்தியும், பிரேமையும் உண்டு. இருந்தாலும் அதை வெளிப்படையாகக் காட்டிக் கொள்ள ஏனே அவர்களுக்குத் தைரியம் கிடையாது.

• • •

இந்த 'இரண்டுங் கெட்டான்' நிலையிலுள்ளவர்களின் கோஷ்டியில் சேர்க்கப்பட வேண்டியவர்கள் ஒரு பிரபல நாடகக் கம்பெனியின் நிர்வாகிகள். தங்களுடைய நாடகங்களிலெல்லாம்—தங்கள் பிரேமை பரிமளிக்க—'' பொடி'' வைத்து நடத்தி வருகிருர்கள்.

இதில் ஒரு விசேஷம்! இந்த நாடகக் கம்பெனியின் உரிமையாளர்களுக்கு நம் புராண இதிஹாஸங்களின்மீது நம்பிக்கை கிடையாது! ஆனால் அவர்களது கம்பெனி ஆரம்பித்த அன்று முதல் இன்று வரை அவர்களது ஆரம்ப நாடகமும் சரி, இறுதி (பட்டாபிஷேக)நாடகமும் சரி, புராண நாடகம்தான்!

• • •

அது மட்டுமல்ல. இன்னொரு வேடிக்கை என்ன தெரியுமா? அவர்கள் புராண, சமூக, சரித்திர சம்பந்தமான பல நாடகங்களை நடித்தாலும், அவர்களது புராண நாடகங்களுக்குத்தான் அதிகமான வசூல். அவர்கள் நடத்தும் சில "சீர்திருத்த" நாடகங்கள் மூலம் ஏற்படும் நஷ்டத்தைக்கூட ஈடு செய்து கொடுத்து வருகிறது அவர்களுடைய புராண நாடகங்களின் வசூல்!

• • •

ஒரு சமயம் கோயமுத்தூரில் மேற்படி நாடக சபையினர் நாடகங்களை நடத்தி வந்தனர். வசூல் ரொம்பவும் மோசமாக இருந்தது. கம்பெனியே ஆட்டம் கொடுக்கும் நிலைக்கு வந்துவிட்டது. சட்டென்று ஒரு புராண நாடகத்தை அவர்கள் ஆரம்பித்தனர். கம்பெனி உயிர் தப்பியது!

• • •

இந்தக் கோஷ்டியில் சேர்ந்த ஒரு நடிகர், தமக்கு நாஸ்திகத்தின் மீது நம்பிக்கை இருப்பதை பகிரங்கமாகக் கூறிக் கொள்கிறார். ஆனால் இந்த 'தீரர்' நடிப்பதெல்லாம் புராணப் படங்களில்தான்! அதுவும் கடவுள்களின் கதா பாத்திரங்களில்தான்! இது எப்படி?

• • •

மேற்கூறிய நடிகர் பேசுவது, நடந்துகொள்வது எல்லாம் நாஸ்திகமாக இருக்கிறது. ஆனால் அவர் வீட்டிற்குப் போய்ப் பார்த்தால் அவர் 'சிவ பூஜை' செய்வதை இன்றும் பார்க்கலாம். இப்படி ஒரு ரகம்!

முகம் சற்று அவலக்ஷணமாக இருக்கும் யாரேனும் ஒருவர் படத்திலோ அல்லது நாடகத்திலோ நடிக்க ஆசைப் பட்டால் சாதாரணமாக, நாம் அவரைக் கிண்டல் செய்வது வழக்கம். "அடுத்தபடி ராமாயணம் நடத்தப் போகிறோம்; அப்பொழுது ஆஞ்சநேயர் வேஷம் உமக்குத் தான்" என்று கேலியாகச் சொல்லுவதும் உண்டு.

• • •

நாம் இந்த ஆஞ்சநேயர் வேஷத்தைக் கேவலமாகப் பேசுகிறோம். ஆனால் அது எவ்வளவு உயர்ந்த பாத்திரம் தெரியுமா? கிராமாந்திரங்களிலும், ஆந்திர நாட்டிலும் இப்பொழுது கூட இந்தப் பாத்திரத்தை ஏற்று நடிக்க எவ்வளவு போட்டா போட்டிகள் தெரியுமா?

• • •

மதுரை ஸ்ரீ தேவி பால விநோத சங்கீத சபாவின் உரிமையாளரான நவாப் ஸ்ரீ. டி. எஸ். ராஜமாணிக்கம் தான் இன்றும் அவர்களின் நாடகங்களில் இந்த ஆஞ்சநேயர் வேஷத்தைப் போடுபவர்!

• • •

அதே மாதிரிதான் வைரம் அருணாசலம் செட்டியாரின் பட்டாபிஷேக நாடகத்தில் ஆஞ்சநேயர் வேஷம் போட்டுக் கொள்ள கே. ஆர். ராம்சிங்தான் வந்தாக வேண்டும்.

• • •

அவ்வளவு தூரம் போவானேன்; இன்று கதாநாயகன் வேஷங்களில் நடித்து வரும் நடிகர் கே. ஆர். ராமசாமி; டி. கே. எஸ். பிரதர்ஸ் நாடகக் கம்பெனியில் இருந்த காலத்தில் ஆஞ்சநேயர் வேஷத்தில் நடித்து வந்தார் என்றால் உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கிறதல்லவா?

அழகிய நீடித்த சுருள் கேசத்திற்கு

ஹாலிவுட் ஹேர் கர்லிங் லோஷன் உபயோகியுங்கள்

இதன் பெயரிலிருந்து ஊகிப்பதைப் போன்றே இந்த கர்லிங் லோஷன் உங்கள் கேசத்தை பலவந்தமாகச் சுருளச் செய்கிறது. ஹானியற்றது என்பதற்கு உத்தரவாதம். தலையை வாரிவிட்டுக் கொள்வதாலும், ஸ்நானம் செய்வதாலும், மழையினாலும் பாதிக்கப் படாதது. இதை உபயோகித்த மூன்று தினங்களுக்குள் நல்ல பலன் அளிக்கிறது. ஒரு வார உபயோகத்தில் நிரந்தரமான சுருள் அலைகளை அளிக்கிறது. ஸினிமா நக்ஷத்திரங்கள் முதல், பள்ளி மாணாக்கர்கள் வரை அனைவராலும் விரும்பிப் போற்றப்படும் விபரம், இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் தினே தினே எங்களுக்கு வந்து குவியும் ஏராளமான புகழுரைக் கடிதங்களின் மூலம் நிரூபிக்கப் பட்டு விட்டது. ஒரு பாட்டில் விலை ரூ. 2-8-0. போஸ்டேஜ் தனி. ஒரே சமயம் 3 பாட்டில்களுக்கு ஆர்டர் செய்தால் போஸ்டேஜ் இனாம்.

ஸோல் டிஸ்ட்ரிப்யூட்டர்கள் :

THE AMRIT PHARMACY (G. M. M.) JULLUNDUR CITY.

பொழுது போக்குக்கு ஏற்ற
புதுமையான புத்தகங்கள்

1 சுதந்திர ஜோதி

[ஸ்ரீமதி ராஜம் கிருஷ்ணன் எழுதிய அற்புத நவீனம்] 2 4 0

2 ராஜாஜியின் உவமைகள்

[கவர்னர் ஜெனரல் ராஜாஜியின் ஒப்பற்ற உதாரணக் கதைகள்] 1 8 0

3 நவகாளி யாத்திரை

காந்திமகான் கீழ் வங்காளத்தில் செய்த சரித்திரப் பிரசித்தமான அஹிம்ஸா யாத்திரையில் நேரில் கலந்துகொண்ட ஸ்ரீ. "சாவி" எழுதியது 1 8 0

4 தந்தையும் மகளும்

ஸ்ரீ- சாவி எழுதிய மிகச் சிறந்த நாவல் 2 0 0

5 லெனின் வாழ்க்கையில் சில கதைகள்

[மொழி பெயர்த்தவர் : "சாவி"] 1 8 0

6 வத்ஸலையின் வாழ்க்கை

["சாவி"யின் சுவை மிகுந்த சிறு கதைகள் கொண்டது] 0 8 0

7 முயல் வேட்டை 0 4 0

8 ஜிம்மியும் சீனுவும் 0 4 0

வாடாமலர் பதிப்பகம்

2, லட்சுமிநாராயணன் தெரு — மாம்பலம், சென்னை-17

இசைச் செய்தி

பாகவதருக்குப் பட்டம்

சென்னை, மைலாப்பூர் ஸ்ரீ கபாலீஸ்வரர் ஆலயத்தில் சென்ற மாதம் 5-ம் தேதி ஸ்ரீ. எம். கே. தியாகராஜ பாகவதரின் சங்கீதக் கச்சேரி நடைபெற்றது. மந்திரி கனம் எம். பக்தவத்ஸலம் தேவஸ்தானத்தின் சார்பில் பாகவதருக்கு "கந்தர்வ கான ரத்னம்" என்ற பட்டத்தை வழங்கினார்.

தமிழில் ரக்ஷரேகா

டைரெக்டர் ஆர். பத்மனபன், அஞ்சலி தேவி, பானுமதி, நாகேஸ்வரராவ் இவர்களை பிரதம பாகத்தில் கொண்டு தயாரித்து வரும் ரக்ஷரேகா தெலுங்குப் படத்தைத் தமிழாக்கி வெளியிடவும் திட்டம் போட்டு வருகிறாராம்.

வன சுந்தரி

கிருஷ்ண பிக்சர்ஸாரின் அடுத்த படத்தின் பெயர் வனசுந்தரி. 'இளங்கோவன்' கதை, வசனம் எழுதுகிறார். சின்னப்பா, கிருஷ்ணன், மதுரம் ஒப்பந்தம் செய்யப் பட்டிருக்கின்றனர். பானுமதி, ராஜகுமாரியும் கூட நடிக்கலாம் என்று சொல்லப் படுகிறது. கிருஷ்ணன், பஞ்சு தான் இப்படத்தின் டைரெக்டர்கள்.

ஹிந்தியில் பவளக்கொடி

பக்ஷி ராஜா பிலிம்ஸாரின் பவளக் கொடியை ஹிந்தியிலும் பேச வைக்கப் போகிறார்களாம்.

கட்டபொம்மு உரிமை

தாய் நாட்டிற்காகப் பாடுபட்ட பழம் தமிழ் வீரர்களான கட்டபொம்மு, ஊமைத்துரை ஆகியவர்களின் சரித்திரத்தைப் பற்றிய சகல உரிமைகளையும், குறிப்பாக நாடகமாக நடத்தவும், சினிமாப் படமாகப் பிடிக்கவும், நடிகர் டி. எஸ். பாலையாவும், அவருடைய நண்பர் ஸ்ரீ. எம். வி. பாண்டியம் பிள்ளையும் வாங்கியிருக்கின்றனர்.

இந்தியப் படங்களுக்குத் தடை

இந்தியன் டொமினியன் கொடி, தேசிய கீதங்கள் உள்ள இந்திய சினிமாப் படங்களை பாகிஸ்தானில் காண்பிக்கக் கூடாதென, கீழ் பாகிஸ்தான் சினிமாப் பட தணிக்கை போர்டார் உத்திரவிட்டிருக்கின்றனர்.

'தூக்குமேடை'க்குத் தடை

தூக்கு மேடை என்ற தமிழ் நாடகம் மிகக் கேவலமாக இருப்பதாகவும், அதை இந்த மாகாணத்தில் எங்கும் நடிக்கக் கூடாதெனவும் சென்னை சர்க்கார் சென்ற மாதம் 28-ம் தேதி தடை விதித்துள்ளனர்.

சுந்தரிபாய் தாயாரானார்

ஜெமினியின் ஹாஸ்ய நடிகையான எம். எஸ். சுந்தரிபாய் இம்மாதம் 7-ம் தேதி ஒரு ஆண் குழந்தைக்குத் தாயாரானாள். அன்று ஜெமினி ஸ்டுடியோவில் இந்த மகிழ்ச்சியைத் தெரிவிக்க ஸ்ரீ. சுப்பு மிட்டாய்கள் வழங்கினார்.

சந்திரமோஹன் காலமானார்

இம் மாதம் 2-ம் தேதி பம்பாயில் தமது 44-வது வயதில் நடிகர் சந்திரமோஹன், ஹிருதய நோயினால் மரணமடைந்த செய்தி கேட்டு வருந்துகிறோம். சந்திரமோஹன் ஒரு சிறந்த குணசித்திர நடிகர்.

தியேட்டர்காரர்கள் ஹர்த்தால்

மத்திய மாகாண சர்க்காரின் தமாஷா வரி உயர்வை ஆட்சேபித்து நாகபுரியிலுள்ள தியேட்டர்காரர்கள் அனைவரும் இம்மாதம் 1-ம் தேதி முதல் ஒரு வாரத்திற்கு தமது தியேட்டர்களை மூடி ஹர்த்தால் அனுஷ்டித்தனர்.

தங்கம்மா

பம்பாயில் புதிதாக ஆரம்பமாகியுள்ள பாபுலர் புரொடக்ஷன்ஸ் என்ற கம்பெனியார் தங்கம்மா என்ற தமிழ் சமூகப் படத்தைத் தயாரிக்கும் முயற்சியைச் செய்து வருகிறார்கள். பாரத் மூவிடோன் ஸ்டுடியோவில் தயாராகப் போகும் இப்படத்தை கே. பி. ஷஹானி டைரெக்ட் செய்வாராம். இப்படத்தின் வசனங்களையும் பாடல்களையும் எஸ். எஸ். வாசன் என்பவர் எழுதி வருகிறாராம்.

தியேட்டரில் கலவரம்

சென்ற மாதம் 30-ம் தேதி விஜயவாடா "ஜய் ஹிந்த்" தியேட்டரில் ஒரு கலவரம் ஏற்பட்டது. அன்று அந்தத் தியேட்டரில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட படத்திற்கு போலீஸ் படையினர் ஐம்பது பேர் இலவசமாக வர முயன்றனராம். கொட்டகை சிப்பந்திகள் அதைத் தடுக்கவே இரு தரப்பினருக்கும் இடையே சண்டை ஏற்பட்டதாம்.

டைரெக்டர் காலமானார்

வட நாட்டு பட டைரெக்டர்களில் ஒருவரான ஹோமி மாஸ்டர் சென்ற மாதம் காலமானார். இவர் மௌனப் பட காலத்தில் பிரபலமானவர். கோஹினூர், இம்பீரியல் கம்பெனிக்காக இவர் பல படங்களை டைரெக்ட் செய்திருக்கிறார்.

ஆப்ரேஷன் இல்லை
பத்தியமில்லை

உத்திரவாதத்துடன்
சுகப்படுத்தப்படும்

மூலம், பவுத்திரம், எத்தனை முளைகள், எத்தனை துவாரங்கள், சீழ், ரத்தம் வந்து கொண்டிருந்தாலும் கவலை வேண்டாம். நேரில் வந்து வைத்தியம் செய்து கொள்ள வேண்டும். பெண்களுக்கு பெண்களைக் கொண்டே சிகிச்சை செய்யப்படும். ஏராளமான நற்சாட்சி பத்திரங்களும், தங்க மெடல்களும் பரிசு பெற்றவர்

கந்தன் மூலபவுத்திர ஆஸ்பத்திரி

137, தங்கசாலைத் தெரு, சௌகார்பேட்டை, சென்னை-1.

சரோஜா நடனம்

பிரபல போலோ நாத் (பி. எஸ்.)—சரோஜா கோஷ்டியினர் மைலை ரஸிக ரஞ்சனி சபையில் இம் மாதம் 9-ந் தேதி யன்று ஒரு நாட்டிய விருந்தளித்தனர். அவர்கள் ஆடிய ரதி-மன்மதன் நனடமும், காவிய பர்த்தன டநனமும் மிக நன்ருயிருந்தன.

ஸினி டெக்னிஷ்யன்கள் கூட்டம்

சென்ற மாதம் 27-ம் தேதி தேனும் பேட்டை காங்ரேஸ் மைதானத்தில் அமைந்துள்ள டாக்குமென்டரி தியேட்டரில் ஸினி டெக்னிஷ்யன்கள் சங்கக் கூட்டம் ஒன்று நடை பெற்றது. அப்பொழுது அச்சடிப்பது பற்றிய ஒரு செய்திப் படம் திரையிட்டுக் காட்டப்பட்டது.

நேருவின் பாராட்டு

புது டில்லியிலுள்ள மதருஸி கல்விச் சங்கத்தின் ஹையர் செகண்டரி ஸ்கூல் உதவி நிதிக்காக ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மியின் சங்கீதக் கச்சேரி ஒன்று நடைபெற்றது. மேற்படி கச்சேரிக்கு இந்தியப் பிரதம மந்திரி பண்டித நேரு தலைமை வகித்தார். கவர்னர் ஜெனரல் ராஜாஜியும் கச்சேரிக்கு வந்திருந்தார். பண்டித நேரு எம். எஸ். எஸ்.ஸை 'சங்கீத ராணி' என்று புகழ்ந்து கூறினுர்.

கஸ்தூரிபாய் கான சபை

பழைய மாம்பலத்திலுள்ள மேற்படி சபையார் தங்கள் இரண்டாவது ஆண்டு விழாவை இம் மாதம் 10-ந் தேதி சிறப்பாய் கொண்டாடினுர்கள். இது சம்பந்தமாக ஏழைகளுக்கு அன்ன மளித்தனர். சங்கீதக் கச்சேரியும், கஸ்தூரிபாய் பட ஊர்வலமும் நடந்தன.

வாழ்த்துகிரும்

தாராபுரம், வஸந்தா டாக்கிஸின் மானேஜிங் பார்ட்னரான ஸ்ரீ. ராஜாஜி. திருமலைஸ்வாமி செட்டியாரின் குமாரன் சிரஞ்சீவி டி. ஜகன்னுதன், மதுரை ஸ்ரீ கிருஷ்ண ரைஸ்மில் ஸ்டோர்ஸைச் சேர்ந்த ஸ்ரீ. எஸ். பி. ராமகிருஷ்ண செட்டியாரின் புத்திரி சௌ. கிருஷ்ணவேணியை இம்மாதம் 4-ம் தேதி வாழ்க்கைத் துணைவியாக அடைந்தார்.

• • •

பம்பாய் லிபர்ட்டி நியூஸ் ஏஜன்ஸி சொந்தக்காரரான ஸ்ரீ. எஸ். வரதாச்சாரியின் குமாரர் சி. வி. கிருஷ்ணமாச்சாரிக்கும், தேவ கோட்டை வக்கீல் ஸ்ரீ. ஆர். கிருஷ்ணய்யங்காரின் புத்திரி சௌ. அலமேலுவுக்கும் இம் மாதம் 22-ந் தேதியன்று உத்தமர் கோயிலில் திருமணம் நடந்தேறியது. தம்பதிகளுக்கு நம் ஆசிர்வாதங்கள்.

கள்வனின் காதலி

என்னெஸ்கே பில்ம்ஸார் அடுத்தபடியாக ஆசிரியர் "கல்கி" எழுதிய கள்வனின் காதலியைப் படமாகத் தயாரிக்கப் போவதாக அறிவித்திருக்

இன்றே பிரதிக்கு முந்துங்கள்

"தூங்காதே தமிழா"

"மக்கள் மாக்களன்று, மக்களாகவே இருக்கிருர்கள். ஆறறிவு படைத்தவன்தான் மனிதன். பகுத்தறிவாளர் ஆகாயத்தினின்று குதித்து விடவில்லை" இதை விளக்குவதுதான் இப் புத்தகம். இதில் கடவுள் யார்? உருவ வணக்கம் அவசியந்தானு? பிரிவினை வேண்டுமா? தமிழ் நாடு தமிழருக்கே தானு? என்பன போன்ற அரிய விஷயங்கள் 'ஆயனுல்' எழுதப் பட்டுள்ளது. விலை அணு 0-14-0. வேண்டுவோர் இன்றே எழுதி V. P. P. யில் பெறுங்கள்.

கிடைக்குமிடம் :

இன்ப நிலயம்

43, பாலையப்பன் தெரு,

ஏழு கிணறு — சென்னை-1.

கின்றனர். படம் கோவை பக்ஷி ராஜா ஸ்டுடியோவில் தயாரிக்கப் படும். இதில் எஸ். வி. சகஸ்ரநாமம் பிரதம பாகத்தில் நடிப்பார் என்று கேள்வி. வசனத்தை ஸி. என். அண்ணாத்துரைதான் எழுதப் போகிறாராம்.

சென்னையில் கீதா

மைசூர் ஸ்டுடியோ ஒன்றில் பாதி வரை தயாராகி முடிவடைந்துள்ள யோகி என்ற தமிழ்ப் படம் கீதா என்ற பெயரில் சென்னை ஸ்டுடியோ ஒன்றில் தயாராகுமென்றுதெரிகிறது. மேற்கொண்டு படத்தை டைரெக்ட் செய்ய வேப்பு ஒப்பந்தம் செய்யப் பட்டிருக்கிறாராம்.

திண்டுக்கல்லில் கடும் புயல்

ஏப்ரல் ?-ந் தேதி இரவு திண்டுக் கல்லில் கடும் புயல் மழை ஏற் பட்டது. அதன் விளைவாக நான்கு டூரிங் சினிமாக்கள் வீழ்ந்தன. இரண்டு ஸ்திரீகள் மாண்டனராம்; பலருக்குக் காயமாம்.

நக்ஷத்திரத்தின் வருமான வரி

ஹாலிவுட் நக்ஷத்திரங்களின் வரு மானங்களை விசாரித்து வரி விதிக்க அமெரிக்காவில் விசேஷ அதிகாரிகள் உண்டு. இந்திய சர்க்காரும் அப்படிச் செய்து, வட இந்திய நக்ஷத்திரமான ஸுரையாவுக்கு நான்கு லக்ஷம் ரூபாய் வருமானவரி விதித்தார்களாம். இது வரை எந்த நக்ஷத்திரமும் இவ்வ ளவு வருமான வரி கொடுத்ததில்லை என்று தெரிகிறது.

வாஸனின் தாயார் காலமானார்

ஜெமினி, ஆனந்த விகடன் ஸ்தாப னங்களின் அதிபரான ஸ்ரீ. எஸ். எஸ். வாஸனின் தாயார் மார்ச் 22-ந் தேதி காலமான செய்தி கேட்டு வருந்து கிறோம். அவரது பிரிவால் மன முடைந்து போயுள்ள ஸ்ரீ. வாஸனுக்கு நம் ஆழ்ந்த அநுதாபங்களைத் தெரி வித்துக் கொள்ளுகிறோம்.

சென்னை சுந்தரம் மோட்டார்ஸைச் சேர்ந்த ஸ்ரீ. எஸ். துரைசாமியின் புத்திரி குமாரி சாரளாவின் பரதநாட்டியம் தியாகராய நகர் வாணி மஹாலில் தமிழ் வருஷப் பிறப்பன்று நடைபெற்றது.

ஸ்டுடியோ பிரமுகர் காலமானார்

மாடர்ன் தியேட்டர்ஸ் லிமிடெட் டின் நிர்வாகத் தலைவரும், சேலம் ஜில்லா வர்த்தக சபைத் தலைவருமான ராவ்பகதூர் எஸ். மி. ராஜ மாணிக்க பண்டாரம் மாரடைப்பினால் திடீ ரென்று சென்ற 14-ந் தேதி காலமான செய்தியை வருத்தத்துடன் தெரிவிக் கிறோம். சேலம் வியாபாரிகள் 15-ந் தேதியன்று அவர் மரணத்திற்காக அரைநாள் கடைகளை மூடிவைத்தனர்.

காரைக்குடி அகிலாண்டம் கம்பெ னியார் வெளியிட்டுள்ள "பஞ்சாங்க மலர்" ஒன்று வரப் பெற்றோம். பஞ் சாங்கம் தவிர இதில் காரைக்குடியிலி ருந்து புறப்படும் ரயில், பஸ் கால அட்டவணைகளும் உள்ளன.

பிரம்மலோகம்

ஔவையார்

ஜெமினியின் 'ஔவையார்' கொத்தமங்கலம் சுப்புவின் டைரெக்‌ஷனில் மளமளவென்று வளர்ந்து வருகிறது. அடுத்தபடியாக அதிகமானும், வள்ளல் பாரியும் தோன்றும் காட்சி படமாக்கப்பட இருக்கிறதாம். அதிகமானாக மகா விஷ்ணு ராமஸ்வாமி அய்யங்காரும், வள்ளலாக கே. நடராஜனும் நடிக்கிறார்களாம்.

நாட்டிய ராணி

பாஸ்கர் பிக்சர்ஸாரது 'நாட்டிய ராணி'யின் படப்பிடிப்பு ஜெமினி ஸ்டுடியோவில் ஜரூராக நடைபெற்று வருகிறது. பி. எஸ். சரோஜா. ஜெயம்மா, கே. ராஜாமணி மூவரும் தோன்றும் கட்டங்கள் படமாக்கப்பட்டுவருகின்றன. இப் படத்தை பி. என். ராவ் டைரெக்ட்செய்கிறார்.

ரத்னகுமார்

வெகு சீக்கிரம் திரையிடப்பெற விருக்கும் படங்களில் முருகன் டாக்கீஸாரது 'ரத்னகுமார்' ஒன்றாக இருக்கும். நியூடோன் ஸ்டுடியோவில் தயாராகி வரும் இப்படத்தில் பி. யு. சின்னப்பா, பானுமதி, எம். ஜி. ராமச்சந்திரன், மீனலோசனி, கிருஷ்ணன், மதுரம் முதலியவர்கள் நடிக்கின்றனர். கிருஷ்ணன் - பஞ்சு இருவரும் இப்படத்தை டைரெக்ட் செய்கின்றனர்.

மங்கையர்க்கரசி

நாகூரின் மேற்பார்வையில் இப்பொழுது 'மங்கையர்க்கரசி' நியூடோனில் உருவாகி வருகிறது. நாசி வீட்டுக் காக்ஷிகள் சமீபத்தில் படமாக்கப்பட்டன. இதில் குஸ்தி, குத்துச் சண்டை, கழிவிளையாட்டு, முதலியவைகளும் சேர்க்கப் பட்டிருக்கிறதாம். சின்னப்பா, கண்ணாம்பா, டி. எம். சாரதாம்பாள், புதுக்கோட்டை சீனு ஆகியவர்கள் நடிக்கும் சில பாகங்கள் சமீபத்தில் படமெடுக்கப்பட்டன.

பாரிஜாதம்

லாவண்யாவின் 'பாரிஜாதம்' சில புதிய மாறுதல்களுடன் நியூடோனில் கே. எஸ். கோபால கிருஷ்ணன் டைரெக்‌ஷனில் தயாராகி வருகிறது. இப்படத்தில் ஒரு நல்ல பாகத்தில் நடிக்க எம். வி. ராஜம்மாவும் ஒப்பந்தம் செய்யப் பட்டிருக்கிறார்.}

லாவண்யா

ஈஸ்டர்ன் ஆர்ட் ப்ரொடக்‌ஷன்ஸாரது 'லாவண்யா'வின் படப்பிடிப்பு வாஹினி ஸ்டுடியோவில் நடைபெற்று வருகிறது. பக்தைக்கு (பேபி கமலா) பார்வதி (குமாரி பத்மாக்ஷி) அருள் புரிவதாக உள்ள ஒரு காக்ஷி சமீபத்தில் படமாக்கப் பட்டது.

கன்னியின் காதலி

ஜூபிடரின் அடுத்த வெளியீடு ராம்னாத்-சேகரின் தயாரிப்பான 'கன்னியின் காதலி'தானாம். இப்படத்தில் வில்லன் துர்ஜயனாக கே. ஆர். ராம்சிங் நடித்து வருகிறார். சமீபத்தில் இப் படத்திற்காக சென்னையில், மாதுரி தேவியும் முஸ்தபாவும் தோன்றும் சில வெளிப் புறக் காட்சிகள் தயாரிக்கப்பட்டன.

கிருஷ்ண விஜயம்

சுந்தர் ராவ் நட்கர்ணியின் டைரெக்‌ஷனில் ஜூபிடரின் 'கிருஷ்ண விஜயம்' தயாராகி வருகிறது. ஒரு அசுரனின் கொடுமை தாங்காது தேவர்கள் சமுத்திரத்தில் இறங்கப் போகின்றனர். அது சமயம் நாரதரின் கானம் கேட்கிறது. இக் காட்சி சமீபத்தில் அடையார் கடற்கரையில் படமாக்கப்பட்டது.

இன்பவல்லி

சிவாமணா பிக்சர்ஸாரது 'இன்பவல்லி' படப்பிடிப்பு சேலம் ரத்னா ஸ்டுடியோவில் நடைபெற்று வருகிறது. மஹாலிங்கம், பி. எஸ். சரோஜா, சரஸ்வதி, எம். ஆர். சுவாமிநாதன் முதலியவர்கள் நடிக்கின்றனர். நொடானி இப்படத்தை டைரெக்ட் செய்து வருகிறார்.

நவ ஜீவனம்

ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி பிக்சர்ஸாரின் 'நவஜீவனத்'தின் படப்பிடிப்பு முடிவடைந்து விட்டது. இதில் தொழிலாளி, முதலாளி எப்படியிருக்கவேண்டும், அவர்களுடைய கடமை என்ன என்பதை நன்கு விளக்கிக் காட்டப்படும். இப்படத்தின் வசனத்தை 'உதய குமார்'

எழுதியிருக்கிறார். நாகய்யா, கண்ணாம்பா, எஸ். வரலக்ஷ்மி, ஸ்ரீராமன், டி. ஏ. ஜெயலக்ஷ்மி, பேபி ராஜாமணி முதலியவர்கள் நடிக்கின்றனர். கே. பி. நாகபூஷணம் டைரெக்ட் செய்கிறார். ஜெமினி பிக்சர்ஸாரின் வெளியீடாக இப்படம் மே மாதக் கடைசியில் ரஸிகர்கள் முன் காட்சி யளிக்கும்.

இளவரசி

மைசூர் நவஜோதி ஸ்டுடியோவில் ஜி. கோவிந்தன் கம்பெனியார் தயாரித்து வரும் இந்தப் படத்தின் பெயர் 'மருத நாட்டு இளவரசி'. படம் அநேகமாக முக்கால்வாசி முடிவடைந்து விட்டது. இப்படத்தில் எம். ஜி. ராமச்சந்திரன், ஸி. எஸ். டி. சிங் இருவரும் கத்திச் சண்டை, கட்டாரிசண்டை, மல்யுத்தம் முதலியவைகளைச் செய்கின்றனர். வி. என். ஜானகி, சக்ரபாணி, வீரப்பா, நாகரத்னம் முதலியவர்கள் இதில் நடிக்கின்னர். காசிலிங்கம் இப்படத்தை டைரெக்ட் செய்து வருகிறார்.

பொன்முடி

மாடர்ன் தியேட்டர்ஸாரின் அடுத்தபடம் 'பொன்முடி' கதை 'பாரதிதாஸனி'ன் எதிர்பாராத முத்தம் என்பதாம். மாதுரி தேவி, நரசிம்ம பாரதி இருவரும் நடிக்கின்றனர். டைரெக்டர் எல்லிஸ். ஆர். டங்கன். சில வெளிப்புறக் காட்சிகளை மஹாபலி புறத்தில் சமீபத்தில் படமாக்கிக் கொண்டு போயிருக்கிறார்.

தேவமனோஹரி

ஆர். கே. யெஸ் பிக்சர்ஸாரின் தேவமனோஹரி மளமளவென்று வளர்ந்து வருகிறாள். சமீபத்தில் பானுமதி சம்பந்தப்பட்ட காட்சிகள் ப்ரகதி ஸ்டுடியோவில் படமாக்கப்பட்டன. ஏ. டி. கிருஷ்ணஸ்வாமி இப்படத்தை டைரெக்ட் செய்கிறார்.

மாயாவதி

கணபதி பிக்சர்ஸாரின் மாயாவதி படப்பிடிப்பு மும்முரமாக நடை பெறுகிறதாம். சமீபத்தில் மஹாலிங்கம், அஞ்சலி தோன்றும் காட்சிகள் மாடர்ன் தியேட்டர்ஸ்ஸ்டுடியோவில் படமாக்கப் பட்டதாம். டி. ஆர். சுந்தரம் இப்படத்தை டைரெக்ட் செய்கிறார்.

லைலாமஜ்னு

பாலாஜி பிக்சர்ஸாரின் இப்படத்தின் ஷூட்டிங் நியூடோனில் தொடர்ந்து நடந்து வருகிறது.

உங்களதிர்ஷ்டத்தில் எழுதி இருப்பதென்ன?

நீங்கள் ஒரு வருஷத்திற்குள் நடக்கும் சுபா சுபங்களை அறிந்து கொள்ள வேண்டுமெனில், இன்றே ஒரு கார்டில் உங்களுடைய விலாசம், ஒரு புஷ்பத்தின் பெயர் எழுதியனுப்புங்கள். நாங்கள் ஜோதிட சாஸ்திர கணிதப்படி தங்களுக்கு உண்டாகும் லாப நஷ்டங்கள், எந்த வியாபாரத்தால் லாபம் கிடைக்கும், எங்ஙனம் பொருள் சேரும், உத்தியோகம் எப்போது கிடைக்கும், வேலை ஆட்களுடைய அபிவிருத்தி, தம்பதிகளுடைய சௌக்கியம், ஆரோக்கியம், வியாதி, தூரப்பிரயாணங்கள், வியாஜ்ஜியம் அல்லது, பரிக்ஷைகளில் தேர்ச்சி, கல்யாணம், பூமி, அல்லது, ஆஸ்தியினால் சுகம், புதிய நட்பு, உங்கள் கார்டு சேர்ந்த உடனே மாதவாரி பலனும், வருட பலனும் ரூ. 1-4-0க்கு தபாலில் V. P. யில் அனுப்புகிறோம். தபால் செலவு வேறு. துரதிர்ஷ்டத்தை அதிர்ஷ்டமாக்கிக்கொள்ளவும் வழியுண்டு; எழுதி அனுப்புகிறோம்; இதனால் வரப்போகும் கஷ்டங்களிலிருந்து தப்பித்துக்கொள்ளலாம். ஒருமுறை பரீக்ஷித்தாலே தெரியும். உங்கள் ஜாதக பலன்களின் திறமையைத் தப்பென்று ருஜூ செய்தால் கட்டிய பணம் வாபஸ் செய்யப்படும்.

பண்டிட். தேவ் நத் சாஸ்திரி ராஜ் ஜோதிஷர் (G.D.S.)

கர்த்தர்ப்பூர் (E. P.)

PT. DEV DUTT SHASTRI RAJ JYOTHSHI (G.D.S.)

KARTARPUR, (E. P.)

டைரி

மார்ச் 1949

தேதி

3. ஸ்ரீ கலா சக்தி நாடக சபையின் "கற்பின் சக்தி" நாடகத்தின் பத்திரிகைக் காட்சி நடைபெற்றது.

6. ஸ்ரீ அவினாசிலிங்கம் செட்டியார் தலைமையில் சினி டெக்னீஷ்யன்கள் சங்கக் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

8. சினிமா மூலம் கல்வி போதிக்கும் திட்டத்தை சென்னை மேயர் ஸ்ரீ. எஸ். ராமஸ்வாமி நாயுடு ஆரம்பித்து வைத்தார்.

9. மசூலிப்பட்டணம் தியேட்டர் ஒன்றில் தீ விபத்து ஏற்பட்டது.

சினிமா ரஸிகர்கள் சங்கத்தின் முதல் வருஷாந்திரக் கொண்டாட்டம் நடைபெற்றது.

11. தென்னிந்திய சினிமா ஊழியர் சங்கக் கூட்டம் நடைபெற்றது.

13. சினிமா ஆபரேடர் பரிக்ஷை நடத்தி சர்டிபிகேட்டுகள் வழங்க ஐவர் அடங்கிய ஒரு போர்டை சர்க்கார் நியமித்தனர்.

15. எகிப்திய பத்திரிகைக் கோஷ்டியினர் ஜெமினி "சந்திரலேகா"வைப் பார்த்தனர்

16. "கீத காந்தி" வெளியூர்களில் திரையிடப்பட்டது.

சிங்காநல்லூரில் அம்பாள் டாக்கீஸ் என்ற தியேட்டர் ஆரம்பமாயிற்று.

19. சென்னையில் பாரகன், லக்ஷ்மி ஆகிய இரு தியேட்டர்களிலும் ஜுபிடரின் "வேலைக்காரி" திரையிடப்பட்டது.

24. "வினோதினி" வெளியூர்களில் திரையிடப் பெற்றது.

25. எம். கே. தியாகராஜ பாகவதருக்கு 'கந்தர்வ கான ரத்னம்' என்ற பட்டம் மயிலையில் அளிக்கப்பட்டது.

26. டொமினியன் பார்லிமென்டில் சினிமா தொழில் பரிசீலனைக் கமிட்டி பற்றி ஸ்ரீ. ஆர். ஆர். திவாகர் பேசினார்.

27. சினி டெக்னீஷ்யன்கள் சங்கக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. "அச்சுத் தொழில்" சம்பந்தமான ஒரு செய்திப் படம் காட்டப்பட்டது.

28. "தூக்கு மேடை" என்ற நாடகத்தை எங்கும் நடத்தக் கூடாதென சென்னை சர்க்கார் தடை விதித்தது.

30. விஜயவாடா "ஜெய் ஹிந்த்" தியேட்டரில் ஒரு கலவரம் நடந்தது.

முயற்சி வீணாவதை தடுக்கலாம்

உங்களுக்கு தேவையான அச்சு வேலைகளை தீர ஆலோசித்துத் திட்டத்துடன் செய்தீர்களானால், குறைந்த செலவில் நிறைந்த பலனை அடையலாம்.

அழகாக அச்சடிப்பது ஒரு தனிக் கலை. அதற்கு நீண்ட நாள் அனுபவமும், பழக்கமும் அவசியம். பல வருஷங்களாக நாங்கள் நானாவித அச்சு வேலைகளைச் செய்து நல்ல அநுபவம் பெற்றுள்ளோம். நீங்கள் கண்டபடி முயற்சி செய்து நஷ்டம் அடைவதற்குப் பதில், எங்கள் அநுபவத்தைக் குறைந்த செலவில் உபயோகித்துக் கொண்டு மிகுந்த பயனடையலாம்.

போன்: 4037

தந்தி: "PRINTHOUSE"

கமர்ஷியல் பிரின்டிங் அன் பப்ளிஷிங் ஹவுஸ்

45/46, அரண்மனைக்காரத் தெரு :: சென்னை-1.

Printed by P. Arunachalam at Commercial Printing & Publishing House, 46, Armenian Street, Madras-1. Edited and Published by P R S. Gopal (Gundoosi), at 25 Godown Street, Madras-1. Telephone 4316.

அழகுக்கு
அழகு செய்யும்
ஆபரணங்கள்
P.A.R
ஆபரணங்களை அழகா
கச் செய்து தருவதில் பிர
சித்தி பெற்றவர்கள்.
“P. A. R.”
முத்திரை
உள்ள நகைகள் நல்ல வேலைப்
பாடுடன்கூட உத்திரவாதமும்
உடையவை ஆகும்.
P.A.ராஜு செட்டியார் & பிரதர்
தந்தி “ராஜா” கோயமுத்தூர் போன்: 268